விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 14 ஞாயிற்றுக்கிழமை (29.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 161

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிகத் துரிதமாகப் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு
★ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
★ வங்கிக் கணக்கு அவசியமில்லை
★ நீடிக்கப்பட்ட சேவை நேரம் ★ 365 நாள் சேவை
★ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P : 021 - 2227310, 021 - 2227555, 021 - 2227560,
FAX : 021 - 2227310 E.mail: thirumurugan@eudoramail.com
46 ஆடியபாதம் வீதி (ப.நோ.கூ.ச முன்பாக)
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

# அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்தால்

# அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கும்

## கண்காணிப்புக் குழு–எழிலன் திருகோணமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று சம்பூரில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.


தற்போதைய திருகோணமலை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையை அடுத்து அவரின் இடத்திற்கு புதிதாகத் தெரிவு செய்யப்படவுள்ள ஆதர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

அத்துடன் திருகோணமலையின் தற்போதைய நிலைபரம் குறித்தும் கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய புத்தர் சிலை குறித்த விடயத்தை எதிர்வரும் 2 ஆம் திகதியுடன் முடிவிற்குக் கொண்டுவர அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இந் நிலையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையினை அகற்றுமாறு நீதிமன்றம் உத்தர விட்டபோதிலும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ஜனாதிபதி புஷ் உறுதி

(வாஷிங்டன்)



இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் முன்வர வேண்டும். இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையை மதிக்கக்கூடிய வகையிலான அமைதிப் பேச்சுக்களை அரசும், விடுதலைப் புலிகளும் ஆரம்பிப்பார்களானால் அதற்கு அமெரிக்கா பூரண ஆதரவு வழங்கத் தயாராகவிருக்கின்றது. இவ்வாறு அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று மாலை சப்இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் வைத்து பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். நேற்று மாலை 6.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்இன்ஸ்பெக்டரான யூட் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அதிகாரியாக செயற்பட்டு வந்த இவர் வீதியால் சென்றுகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த ஒருவர் கைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு சென்றுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் வன்னி மாவட்ட எம். பிகள் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்ற சந்திப்பில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர், சிவசக்தியானந்தன், கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் முக்கியமாக மூன்று விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். மூன்று வருடங்களிலே மாவட்ட ரீதியான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மீறிய செயல்கள் ஒப்பந்த காலத்தில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி–ஜே.வி.பி. முறுகலை தீர்க்க விசேட சமாதானக் குழு அமைப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்

நியமிக்கப்பட்டுள்ளது.

அக் கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக

பிரியதர்ஷன யாப்பாவின் வீட்டில் நடந்த சந்திப்பின்போதே இக் குழு அமைக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்



(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களைக் கொண்ட புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அக் கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதாக இக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


பெருந்தோட்டத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவின் வீட்டில் நடந்த சந்திப்பின்போதே இக் குழு அமைக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அனுர பிரியதர்ஷன யாப்பா, சிறிபதி சூரியாராச்சி, ரி.பி. ஏக்கநாயக்க, நிர்மலகொத்தலாவல, மேர்வின் சில்வா, ஜெயதிஸ்ஸ ஹேரத் மற்றும் பல அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்தித்தபோதே மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு முதலில் ஜனாதிபதியைச் சந்தித்து மக்கள் விடுதலை முன்னணிக் கெதிராக ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் குற்றச்சாட்டுகளில் எது உண்மை. எது பொய் என அவருக்கு எடுத்துக் கூறவுள்ளது.

அதேபோல ஜனாதிபதி குறித்து மக்கள் விடுதலை முன்னணிக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் தகவல்கள் சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவைச் சந்தித்து அவருக்கு விளக்கமளிக்க உள்ளது.

பின்னர் ஜனாதிபதியையும் சோமவன்ஸ அமரசிங்கவையும் தனித்தனியே சந்தித்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் முகமாக கூடுதல் குழு ஒன்றையும் நியமிக்கவும் இந்தக் குழுவினர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச)

# ஐ.நா. விசேட பிரதிநிதி பில்கிளின்டன் நேற்று காலை கல்முனை விஜயம்



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள்கட்டுமானப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானினால் நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதியான அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில்கிளின்டன் நேற்றுக் கல்முனைக்கு பயணம் மேற்கொண்டார்.

தமிழ் நாட்டிற்கான பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்தடைந்த இவர் நேற்று இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் காலை கல்முனையைச் சென்றடைந்தார்.

கல்முனை (12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி. றெஜி நேற்று ஐ.நாவின் விசேட பிரதிநிதி பில் கிளின்டனை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தமிழர் தாயகப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிற்கான மீள்கட்டுமானப் பணிகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.


SWISS
Mineral Water




Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59

Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63

சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# பொதுக்கட்டமைப்பு விடயத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## ஜே.வி.பிக்கு லங்கா சமசமாஜக் கட்சி வேண்டுகோள்

(கொழும்பு)

உத்தேச பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தனது நிலையை ஜே.வி.பி மறுபரிசீலனை செய்ய வேண்டும என்று லங்கா சமசமாஜக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்தக் கட்சி நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டமைக்க 2 பில்லியன் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு சலுகைகளுடன் இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளும் ஆழிப்பேரலையால் கடும் பாதிப்புக்குள்ளாயுள்ளன. ஆதலால் பொதுக்கட்டமைப்புப் போன்ற ஒரு ஒழுங்கமைவு மிகவும் அவசியமானதே.

இப்பொதுக்கட்டமைப்பின் செயல்பாடுகள் குறித்து ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மாவட்ட மற்றும் மண்டல நிர்வாகங்கள் இதில் முழுமையாக செயல்படவுள்ளன. இது தொடர்பான மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டன.

வடக்கு- கிழக்குப் பகுதியில் இக்குழுக்களில் கூடுதலாக 3 பேர் இடம்பெறவுள்ளனர். அரசுத் தரப்பு விடுதலைப்புலிகளின் தரப்பு, முஸ்லிம் தரப்பினர் இதில் அங்கம் வகிப்பர்.

இந்த ஏற்பாடு கூட ஓராண்டுக்கு மட்டுமேதான் ஆதலால் ஜே.வி.பி. தனது நிலையை மறுபரிசீலனை செய்து பொதுக்கட்டமைப்பை ஆதரிக்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# மாற்றாந்தாய் மனப்பாங்குடன் அரசு; பாதிக்கப்பட்ட மட்டு.மீனவர்கள் விசனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலையால் பாதிப்புக்குள்ளான மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்களுக்கு இதுநாள் வரை அரசாங்கத்தால் எவ்வித நஷ்ட ஈடுகளோ, நிவாரணங்களோ வழங்கப்படாமை குறித்து மீனவர்கள் கடும் விசனத்தையும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் ஆழ்கடல் மீனவர்களும், ஆற்று வாவி மீனவர்களும் உடமைகளை இழந்து பெரும் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிர்க்கதியான நிலைக்குள்ளானவர்களில் மீன்பிடித் தொழிலுக்குப் பெயர் பெற்று விளங்கிய கல்லடி, நாவலடி, திருச்செந்தூர், சீலாமுனை, முகத்துவாரம், பாலமீன்மடு, வாகரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவக குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இல்லாமல் கூடாரங்களில் பல்வேறு சிரமங்களுக்கும், அவலங்களுக்கும் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு அரச சார்பற்ற உள்ளூர், வெளியூர் நிறுவனங்களே உதவிகளைப் புரிந்து வருகின்றன. அரசாங்கத்தின் சார்பாக மதிப்பீடுகள் பல முறை மேற்கொள்ளப்பட்டும் இதுவரை எவ்வித நட்டஈடுகளோ அல்லது மீன்பிடி உகரணங்களோ வழங்கப் படாதது குறித்து பாதிப்புக்குள்ளான மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் சார்பில் மீன்பிடி அமைச்சர் கூட வருகை தந்து பாதிப்புக்குள்ளான மீனவர்களுக்கு தங்கள் தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உடனடியாக உதவிகள் வழங்கப்படும் என்று மட்டு கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

மீனவர்களும் உதவிகள் கிடைக்குமென கடுமையாக நம்பினார்கள். ஆனால் இப்போதுதான் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்பதை உணர்கின்றோம் என்று மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்னிலங்கையில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் மீது மீன்பிடி அமைச்சர் காட்டிய ஆர்வம் அவர்களுக்கு வழங்கிய உதவிகள் வடக்கு-கிழக்கிற்கு மாற்றாந்தாய் மனப்பாங்குடனேயே நடைபெறுவதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-4)

# இராசிபலன்

**29.05.2005**

**(வைகாசி 15, ஞாயிற்றுக்கிழமை)**

**சஷ்டி பிற்பகல் 1.00 மணிவரை**

**திருவோணம் முற்பகல் 8.22 மணிவரை**

**இராகுகாலம் 4.22- 5.52 மணிவரை**

**சுபநேரம் 08-52 -10.22மணிவரை**

**அமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பிரபுத்தனம், ஆரோக்கியம், போசன சுகம். |
| இடபம் | எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, குடும்பக்கவலை, காரிய தாமதம். |
| மிதுனம் | அமைதிக் குறைவு, கலகம், காரிய தாமதம், உடல்நலக்குறைவு. |
| கடகம் | தேகநலன், கீர்த்தி, களஸ்திர நன்மை, தொழில் சிந்தை. |
| சிங்கம் | சுபநிகழ்வு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | அஜீரண ரோகம், காரிய இடையுர், புத்திரரால் கவலை, பணவிரயம். |
| துலாம் | தன்னம்பிக்கைக் குறைவு, நிலை மாற்றம், மாதாசுகம், முயற்சிதாமதம். |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, அன்னியர் சந்திப்பு, வாக்குமேன்மை, காரிய அனுகூலம். |
| தனுசு | மனோ சங்கடம், போசனசுகக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| மகரம் | நல்ல முயற்சி, பிறர் உதவி, தெய்வசிந்தை, மாதர் நட்பு. |
| கும்பம் | காரிய அலைச்சல், சேம்பல் நிலை, உறவினர் சந்திப்பு, சுபசெலவு. |
| மீனம் | தனதானிய சேர்க்கை, சயன சுகம், குடும்ப நலம், தொழில் சிந்தை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

*-வளவன்*

## வடமாநில பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை

(சுதுமலை)

வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் கடமைபுரியும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து வடமாநில பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் ஒன்றை அமைக்கவுள்ளனர்.

இந்த ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 120க்கும் அதிகமான பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் உறுப்பினர்களாகவுள்ளனர். பல பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வைப் பெறமுடியும் என்ற நோக்கோடு இப்புதிய சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச் சங்கத்திற்கான ஆரம்ப கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 1.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் அனைத்துப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தருமாறு யாழ்.கிளையின் தலைவர் யா.நக்கீரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனித்தனியே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்குக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-252)

## தேசியப் பாசறையின் இறுதி நாள் நிகழ்வு

(சுதுமலை)

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணிகளும் இணைந்து நடத்தும் தேசியப்பாசறையின் பெண்களுக்கான இறுதிநாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் செயலாளர் வி.தயாமோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுபபாளர், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் ஆகியோரும் கௌரவவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எஸ்.வீரபத்திர பிள்ளை, யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.இராஜதுரை ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வருடம் மகளிருக்கான இத்தேசியப்பாசறையில் யாழ்.மாவட்டத்தில் 18க்கும் அதிகமான பாடசாலைகளும், ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும்தலா இரு ஆசிரியர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக இப்பாசறையின் ஒருங்கிணைப்பாளர் ப.சஞ்சித்குமார் தெரிவித்துள்ளார்.(ற-252)

## இரத்ததானம் செய்பவர்களின் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

உலக குருதி வழங்குநர் தினத்தை முன்னிட்டு வலிந்துதவும் நோக்குடன் இரத்ததானம் (Freedonor) செயபவர்களைக் கௌரவிப்பதற்கு, அதற்கான முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருப்ப தால் தொடர்ச்சியாக வலிந்துதவும் நோக்குடன் இரத்ததானம் செய்பவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைதத்திய அதிகாரி அல்லது பொதுச்சுகாதாரப் பரிசோதகரை நேரடியாகவோ அல்லது 0776-527639, 021- 222 2261233 எனும் தொலைபேசி மூலமோ எதிர்வரும் 4 ஆம் திக திகது முன்னர் தொடர்பு கொண்டு இந்நிகழ்வை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

## திருடர் தப்பியோட்டம்

(சாவகச்சேரி)

நள்ளிரவு வேளை வீட்டின் யன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் வீட்டில் உறக்கத்திலிருந்தோர் விழித்தெழுந்து கூக்குரலிட்டு துரத்திய போது தமது சைக்கிள், இரு சோடி செருப்புக்களையும் வீதியில் போட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி வடக்கு அரசடி வீதியில் உள்ள வீடொன்றிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருடர்களை இனம் காணும் பொருட்டு, அவர்களால் கைவிடப்பட்ட செருப்புக்கள், சைக்கிள் ஆகியன சம்பவம் இடம்பெற்ற வீட்டில இனம் காணும் பொருட்டுவைக்கப்பட்டுள்ளது. (ற-21)

## வீதி மின் ஒளி திட்டம்

(சாவகச்சேரி)

சாவகசசேரி நகரப் பகுதிக்கான வீதி மின் ஒளித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள நடைபெற்றுவருகின்றன.

இதன் முதற்கட்டமாக நகரில் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் 25 மின் விளக்குகளை பிரதான சந்திகள் மற்றும் முதன்மையான இடங்களில் பொருத்துவதற்கான வேலைகள், மின்சாரசபையூடாக மேற்கொள்ளப்படவுள்ளது.

சபையின் வருமானத்திற்கேற்ப வருடந்தோறும் மின் விளக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.(ற-21)

## கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக தங்கநகைகளை இலங்கைக்குக் கொண்டு வந்த ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையப் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரினால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கல்முனை பிரதேசத்தை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து 3 கிலோகிராம் நிறையுடைய தங்கநகைகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தனது பொதியினுள் இவர் தங்க ஆபரணங்களை மறைத்து வைத்திருந்ததாகவும் சந்தேகநபர் சவுதி அரேபியாவிலிருந்து வந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற-9)

## இதழ்கள் வெளிவந்தன

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானத்தினரின் "அருள் ஒளி" மாதாந்தச் சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளிவந்துள்ளது.

★★★

ஆத்மஜோதி ஆத்மீக மாதச் சஞ்சிகையின் வைகாசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ற-2)


# சிறுவிளம்பரம்

## SPOKEN ENGLISH

ஓய்வுபெற்ற ஒருவரினால் வெளிநாடு செல்பவர்கள், உத்தியோகததவர்களுக்கு அடிப்படையிலிருந்து இலகு முறையில் குறுகிய காலத்திற்குள் ஒலிநாடா, C.D. உதவியுடன் வீட்டிற்கு வந்து பேச்சு ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு:- இல.06, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு மானிப்பாய். தொலைபேசி - 021-4591001

(9573)

## மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகினறவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வ்வாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
இரவு 8.30 வரை

(9567)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 30 நட்சத்திரம் - கார்த்திகை M.sc. Computer Engineering in S/W &H/W, B.sc Engineering Electrical & Electronics, CIMA Fully Qualified. P.R உள்ள அவுஸ்திரேலியாவில் தொழில் புரியும் ENGINEER மணமகனுக்கு படித்த குணமுள்ள மணமகள் தேவை MBBS டாக்டர், Accountant விருமபத்தக்கது.

தொடர்பு விள. இல. 9637
மே/பா வலம்புரி. யாழ்ப்பாணம்

(9637)

## வாடகைக்கு

E.L.F-250 Coolar Model Van 40-3387 நிறுவன பாவனைகளுக்கு உகந்தது வாடகைக்கு சாரதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு திருஞானராஜா றோஜிலன், முள்ளிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
T.P. 077 6529419 (9638)


## 50 பேருக்கு கூரைத் தகடுகள்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கு கூரைத்தகடுகளை வழங்கவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபையின் முல்லை மாவட்ட பணிப்பாளர் ச. கோவிந்தராசா தெரிவித்துள்ளார்

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு யப்பான் நிதியுதவியில் நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)


**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

- ★ மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
- ★ சித்திரப் போட்டி
- ★ புகைப்படப் போட்டி
- ★ சிறுகதைப் போட்டி

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள் விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

# வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன்
# சேது சமுத்திரக் கால்வாய் ஆழமாக்கும் பணி ஜூன்-3வது வாரமளவில் ஆரம்பமாகும்

(சென்னை)

தமிழக மக்களின் நூற்றாண்டுக் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்திற்கு சமீபத்தில் மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது.ரூ2427.40 கோடி செலவில் 3 1/2 ஆண்டுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடாவையும் பாக். விரிகுடாவையும் இணைக்கும் சேது சமுத்திரக் கால்வாய் மொத்தம் 167 கி.மீ.நீளம் கொண்டதாகும். பாக். விரிகுடாப் பகுதியில் போதுமான ஆழம் இருப்பதால் அங்கு 78 கி.மீ நீளத்துக்கு ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படமாட்டாது. ஆதம் பாலம் அருகே 35 கி.மீ. தூரத்துக்கும் பாக். நீரிணைப் பகுதியல் 54 கி.மீ.தூரத்துக்கும் மட்டுமே கடலை ஆழப்படுத்தும் பணி நடைபெறும்.

சேது சமுத்திரத் திட்ட தொடக்கவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 3-வது வாரத்தில் நடைபெறும என்று எதிர்பார்க்கப்படுகிறது. சோனியாகாந்தி முன்னிலையில் பிரதமர் மன்மோகனசிங் இந்தத் திட்டத்தைத் தொடககி வைப்பார். இதற்கான ஏற்பாடுகளை மத்திய மந்திரி டி.ஆர்.பாலு தீவிரமாக செய்துவருகிறார்.

அவர் எதிர்வரும் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில் சேது சமுத்திரத்திட்ட பணி இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்யத்திட்டமிட்டுள்ளார். அவரின் உத்தரவின் பேரில் இராமேஸ்வரம் பஸ் நிலையம் அருகே சேது சமுத்திரத் திட்ட அலுவலகம் அமைகிறது.

சேது சமுத்திரத் திட்டப் பணிகள் தொடர்பாக மத்திய மந்திரி டி.ஆர். பாலு கூறியதாவது சேது சமுத்திர திட்டப்பணிகள் அடுத்த மாதம் தொடங்கிவிடும். ஆதம்பாலம்,பாக்.ஜல சந்தி மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் ஒரே சமயத்தில் கடலை ஆழப்படுத்தும் பணி நடைபெறும். கடல் மணல்கள் கடலுக்குள்ளேயே 25 முதல் 30 கிலோ மீற்றர் தொலைவுக்குக் கொண்டு சென்று கொட்டப்படும்.

தனுஷ்கோடி அருகே புயல் காரணமாக கடலில் மூழ்கிய நிலப்பகுதிகளில் மணலைக் கொடடத் திட்டமிடப்பட்டது. என்றாலும் கடலை ஆழப்படுத்தும் போது தோண்டப்படும் மணலை எஙகு கொண்டு போய் கொட்ட வேண்டும் என்பதை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தீர்மானிக்கும்.

சேது சமுத்திரத் திட்டப பணிகளால் சுற்றுச்சூழல் எதுவும் பாதிக்கப்படாது. பவளப் பாறைகளுக்கும் எந்த ஆபத்தும் வராது. மேலுமகடலோர மீனவர்கள் வழக்கம் போல மீன் பிடிக்கலாம். அவர்களது இயல்பு வாழ்வில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. தூத்துக்குடி துறைமுகப்பணிகளும் தங்குதடையின்றி நடைபெறும். மேலும் சேது சமுத்திரத் திட்டத்தால் தமிழக கடலோரப் பகுதியில் உள்ளவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புககள் கிடைக்கும்.

கடலை ஆழப்படுத்தும் பணியை மத்திய அரசு நிறுவனமான இந்திய மணல் அகற்றும் கழகம் மேற்கொள்ளும். அந்த நிறுவனத்துடன மேலும் 3 நிறுவனங்கள் இந்தப்பணியில் ஈடுபடுத்தப்படும். இதற்காக சர்வதேச அளவில் டெணடர் விடப்படும். சேது சமுத்திரத் திட்டப் பணியை சிறப்பாகச் செய்வதற்காக சுயஸ கால்வாய், பனாமாக் கால்வாய்களை ஏற்படுததிய வெளிநாட்டு நிபுணர்களை அழைத்துள்ளோம். அவர்கள் விரைவில் வந்து திட்டப் பணியைப் பார்வையிடுவார்கள்.

பாதுகாப்பான கப்பல் போக்குவரத்துக்கான யோசனைகளை சுயஸ் கால்வாய், நிபுணர்கள் தெரிவிப்பார்கள். பனாமா கால்வாய் நிபுணர்கள் தொழிலாளர்களுக்கு கடலை எப்படி ஆழப் படுத்த வேண்டும் என்ற பயிற்சியை அளிப்பார்கள் என்று தெரிவித்தார். (ற)

## உள்ளூராட்சித் தேர்தல் பெப்ரவரியில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் வாரத்தினுள் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் எதிா வரும் ஒக்டோபர் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

அடுத்தாண்டு மார்ச் மாதத்துடன் உளளூராட்சி மன்றங்களின் ஆட்சிக் காலம் முடிவடைகின்றன.

உளளூராட்சி மன்றங்களின் உத்தியோக பூர்வ பதவிக் காலம் முடிவடைவதற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே தேர்தலை நடததும் அதிகாரம் தேர்தல ஆணையாளருக்கு உள்ளதால் அந்த அதிகாரத்தைப் பயன் படுத்தி பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையாளர் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது(சு-4)

## மாதிரிப்பரீட்சை

(மருதங்கேணி)

வடமராட்சி கல்வி வலயம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி 5 மாதிரிப்பரீட்சைகளை நடாத்தி வருகிறது.

5 தினங்கள் நடைபெறவுள்ள இப்பரீட்சையில் முதலாவது பரீட்சை கடந்த 19ஆம் திகதி நடாத்தப்பட்டது. தொடர்ந்து ஜூன் 9, ஜூன் 23, ஜூலை 7, ஜூலை 28 ஆகிய திகதிகளில் ஏனைய பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன. (ற-35)

## அரங்காலயம்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் பண்பாட்டு மையத்தின் அரங்காலயம நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு யா/ செங்குந்தா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (ற-2)

# புத்தர் சிலை வைத்த முறை பௌத்தத்துக்கு அவமானம்

(கொழும்பு)

திருகோணமலையில் தகுதியற்ற இடத்தில் புத்தர்சிலையினை அப்பிரதேச பௌத்த பிக்குகள் சட்டவிரோதமாக அமைத்து இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் பௌத்த சமயத்துக்கும், சிங்கள மக்களுக்கும் அழிக்க முடியாத அவப்பெயரையும் ஏற்படுத்திவிட்டது என போருக்கு எதிரான தேசிய முன்னணியின் ஆலோசகர் வண. மாதம பாகம அஸ்ஸஜிதேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வில் 'வந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களை அவமானப்படுத்தும் முகமாகவே அவர்கள் இந்தச் செயலைச் செய்தனர். ஆனால் அது அவர்களுக்கே அவமானத்தை தேடிக்கொடுத்துவிட்டது. இதனை இறுதி நேரத்திலாவது உணர்ந்து புத்தர் சிலையினை தொடர்ந்தும் அமைப்பதைக் கைவிட்டு அதனை அகற்றும் வழியினைக் கடைப்பிடிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த இருதசாப்த காலமாக இடம்பெற்ற கோரயுத்தத்தினால் வடக்கு-கிழக்கில் பல இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஆனால் தமிழ் மக்கள் ஒரு பௌத்த விகாரையைக் கூட அழிக்கவில்லை. அப்போது அவர்கள் இனத்தைக் கைவிட்டு மதத்தினை அழிப்பதாக சபதம் எடுத்திருந்தால் இலங்கையில் பௌத்த மக்கள் வணங்குவதற்கு ஒரு பௌத்த விகாரையைக் கூட கண்டிருக்க முடியாது எனத்தெரிவித்தார்.

எனவே இன,மத, மொழி ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக்கொடுக்க முட்டுக்கட்டையாக இயங்கும் பௌத்த பிக்குகளும் அரசியல்வாதிகளும் இதனை உணரவேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (4)

## கணனி நிலையங்களை நிறுவ பிரி. தர்ம ஸ்தாபனம் முன்வருகை

(கொழும்பு)

நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கணனி நிலையங்களை நிறுவுவதற்கு பிரிட்டிஷ் தர்ம ஸ்தாபனமான ரியரொப் முன்வந்துள்ளது. இந்த நிறுவனத்தின் பேச்சாளரான சந்திமபொனான்டோ இது குறித்து தகவல் தெரிவிக்கையில்,

உள்ளூர் சிறுவர்களுக்கும் பிரிட்டிஷ் சிறுவர்களுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு இந்த கணனி நிலையங்கள் வழிவகுக்கும் என்று கூறினார்.

கணனி செயற்பாடுகள் பற்றி சிறுவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதோடு சர்வதேச வெப்தளம் மூலம் தொடர்பு கொள்வது பற்றியும் கற்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்திற்கான செலவினத்தை இளம் பிரிட்டிஷ் தொழில் விற்பன்னர்களும் நலன் விரும்பிகளும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (ற-2)

## மெய்வல்லுநர் போட்டி

(காரைநகர்)

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிப 1.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தீவகக் கல்வி வலயக் கணக்காளர் ஈ.தேவ அருள்ராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற திட்டமிடல் அதிகாரி ஏ. கமலாகரன், ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட அதிகாரி எஸ். பாஸ்கரன், காரை மத்தி கிராம சேவகர் எஸ். சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-246)

## இலங்கைப் பெண் குவைத்தில் கொலை

(கொழும்பு)

குவைத்தில் வைத்து யுவதி ஒருவரை கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் இலங்கையைச் சேர்ந்த 3பேரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளார்.

கொலையுண்ட யுவதியும் இலங்கையர் என்று தெரியவந்துள்ளதாக குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் வெளிநாட்டு அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

குறித்த யுவதியின் மரணம் குறித்து உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன்றன. (ற-9)

# தமிழ் ஊடகவியலாளர்களுக்கு தொடர் மரண அச்சுறுத்தல்

## தமக்கு பாரிய அதிர்ச்சி என்கிறார் சுனந்த

(கொழும்பு)

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கும் நகழ்வு தொடர்வதானது தமக்கு அதிர்ச்சியளித்துள்ளதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

வீரகேசரி, வாராந்தப் பத்திரிகை ஆசிரியருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள சுதந்திர ஊடக இயக்கம் அவ் அறிக்கையில் இதனைத்தெரிவித்துள்ளது.

இது குறித்து சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில்,

வீரகேசரி பத்திரிகையின் ஆசிரியருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதும் அவருக்கு விடுக்கப்பட்ட மிரட்டல் தொலைபேசி அழைப்புக்களும் சந்தேகத்திற்கு இடமான வாகனப் போக்குவரத்துக்களும் தொடர்பில் கல்கிசை பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையை அடுத்து தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வருவது சுதந்திர ஊடக இயக்கத்தினர் மீது ஏற்படுத்தப்படும் பாரிய அழுத்தமாகும். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனவே, ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறும் அனைத்து ஊடகவியலாளர்களிடமும் கோருகிறோம் என்றார். (ற-9)

# சுனாமியின் பின்னரான மாற்றம்! நகர்கிறது மணப்பாடு நிலத்தட்டு !!

## கடல் உள்வாங்கலுக்கும் கொந்தளிப்புக்கும் இதுவே காரணம்

சுமாத்திரா தீவில் ஏற்பட்ட நில அதிர்வுக்குப பின்பு தூத்துக்குடி மாவட்டம் மணப்பாடு மணல் மேட்டுக்குக் கீழ் உள்ள நிலத்தட்டு வட கிழக்குத் திசை நோக்கி நகரத் தொடங்கி உள்ளதால் சில இடங்களில் கடல் உள்வாங்குதலும், சில இடங்களில் கடல் கொந்தளிப்பும் நிகழ்ந்து வருகின்றன.

இந்த நிகழ்வுகளால் இப்போதைக்கு ஆபத்து இல்லை என்றும், கடற்கரையில் உள்ளவர்கள் 200 மீற்றருக்கு அப்பால் குடியிருபபுகளை அமைத்துக் கொண்டால் கடல் நீா ஊருக்குள் புகுவதால் ஆபத்து இருக்காது என்றும் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கல்லைக்கழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புவி தொழில்நுட்ப மையததின் தலைவர் முனைவர் ந.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

சுனாமி பாதிப்புக்கு பின்பு கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களின் சில பகுதிகளில அடிக்கடி கடல் உள்வாங்குவதும், சில இடங்களில் கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டு கடல் நீர் ஊருக்குள் புகுந்துவிடுவது நிகழ்ந்து வருகிறது. இதனால் கடலோரப் பகுதி மக்கள் நிம்மதி இழந்து பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றனர்.

பொதுவாக அமாவாசை, பௌர்ணமி நாள்களில் கடல் அலையின் உயரம் அதிகரித்து, கடல் நீர் வழக்கமான கரை எல்லையைத் தாண்டி வருவது இயல்பு. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் அடிக்கடி நிகழ்வதற்கு வேறு சில காரணங்கள் உள்ளன.

சுமாத்திரா தீவில் ஏற்பட்ட நில அதிர்வால் சுனாமி அலை ஏற்பட்டு பாதிப்பு உண்டானதை அனைவரும் அறிவோம். அந்த நிகழ்வுக்குப் பின்பு, மணப்பாடு மணல் மேட்டுக்குக் கீழ் உள்ள நிலத்தட்டு வட கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதன் விளைவாகத்தான் அண்மையில் தூத்துக்குடி, கோவில்பட்டி, கழுகுமலை பகுதிகளில் லேசான நில அதிர்வு ஏற்பட்டது. கடலூர், மணப்பாடு கடல் பகுதிகளில் கடலுக்குள் நீர்க்குமிழிகள் தோன்றுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இதுவும், இந்த நிலத்தட்டு நகருவதை உணர்த்துகிறது.

மேலும் கிழக்கு கடற்கரைப் பகுதியை, திருச்செந்தூரில் இருந்து வடக்கே ஒரு பகுதியாகவும், தெற்கே ஒரு பகுதியாகவும் பிரித்துக் கொள்ளலாம். திருச்செந்தூர் பகுதியில் கடல் உள்வாங்குகிறது. அதேசமயத்தில், கன்னியாகுமரிப் பகுதியில் கடல் கொநதளிபபு ஏற்பட்டு கடல் நீா ஊருக்குள் புகுந்து விடுகிறது. ஒரு இடத்தில் உள்வாங்கும் கடல் நீர், வேறொரு இடத்தில் வெளியேறுவதால் இது நிகழ்கிறது.

பொதுவாக,தென்மேற்குப் பருவ மழை காலங்களில் கடலில் ஒரு அலைக்கும் மற்றொரு அலைக்கும் இடையே 12 முதல் 14 வினாடி கால இடைவெளி இருக்கும். இப்போது அந்த கால அளவு உள்ளது. எனவே பருவ மழை முன்கூட்டியே தொடங்குவதற்கான அறிகுறியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம்.

கடல் உள்வாங்குவதாலும் கடல் கொந்தளிப்பதாலும் மக்கள் இப்போதைக்கு பயப்படத்தேவையில்லை. சுனாமியால் கடற்கரையின் நிலமட்டம் சமமாகி உள்ளதால் சற்றே உயர்ந்த அலை எழுந்தால் கூட கடல் நர் கரையைத் தாண்டிவிடுகிறது. எனவே குடியிருப்புகளை கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தொலைவிற்கு அப்பால் அமைத்துக் கொள்வது நல்லது.

சுனாமிக்கு பின்பு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஆய்வு செய்து அவற்றைப் பதிவு செய்து வருகிறோம். எதிர்காலத்தில் இத்தகைய பாதிப்புக்களில் இருந்து மக்களைப் பாதுகாக்க எடுக்கவேண்டிய தடுப்பு நடவடிக்கைகள குறித்து அரசுக்கு பரிந்துரைககவுள்ளோம். அந்தப் பரிந்துரைகள் தென்மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி வைக்கப்படும என்றும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# ஹெல்கீசனின் இலங்கை வருகை ரத்து பொதுக்கட்டமைப்பு கேள்விக்குறி

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கனின் இலங்கை பயணம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு தகவல தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும, இதனால் பொதுக்கட்டமைப்பு உள்ளிட்ட அடுத்த கட்ட நகர்வுகளுக்கு சாத்தியம் எதுவும் இல்லையென்று விடுதலைப்புலிகள் கருதுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, ஆழிப்பேரலை நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப்புலிகளுடன் சேர்நது பொதுக் கட்டமைப்பை எப்பாடுபட்டேனும் உருவாக்குவேன் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்து வருகின்றபோதிலும் அத்தகைய கட்டமைப்பு ஒன்று விரைவில் ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லையெனக் கருதப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்தோ, அல்லது அரசடமிருந்தோ தங்களுக்கு எந்த விதமான தகவலும் கிடைக்கவிலலை என்று புலிகளின் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பை விரைவில் ஏற்படுத்துவதாயின் அதற்கான முன் ஆயத்த ஏற்பாடுகள், ஒழுங்குமுறைகள் குறித்து தமக்கு தெரியப்படுத்த வேண்டும்.

ஆனால் அப்படியான தகவல்கள் எதுவும் ஜனாதிபதியிடமிருந்தோ அரசிடமிருந்தோ தெரியவில்லை. அனைத்து விடயங்களிலும் ஜனாதிபதியின் வாய்ப்பேச்சைத் தவிர வேறு எதுவும் நடைபெறவில்லையென விடுதலைப்புலிகளின அரசியல் பிரிவின் மூத்த உறுப்பினர் ஒருவர் மேலும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளில் ஆக்கபூர்வமான நகர்வுகளை எடுக்கக்கூடிய வாய்ப்பு இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியல் ஏற்படலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்போடு இம்மாத இறுதியில நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் அநத நாட்டுப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் இலங்கை வரவிருந்தார்.

ஆனால் அரசியல் நகர்வுகளில் தேக்கநிலை ஏற்பட்டு நிலைமை இறுக்கமடைந்துள்ளதால அவரும் தனது வருகையை மீளவும் பிற்போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் இனி விடார் ஹெல்கீசன் வருவார், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான முன் நகர்வுகள் ஏற்படுவதெல்லாம் சாத்தியமான விடயங்கள் அல்ல என விடுதலைப் புலிகள் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் அமைதி முயற்சிகள் தொடர்பாக தென்னிலங்கையின் அரச தலைமை ஒரு திடமான முடிவை எடுத்து, வெறும் வாயாலே அறிவித்துக்கொண்டிருப்பதை விடுத்து, செயலில் அதைக் காட்ட முன்வந்தால் மட்டுமே பொதுக் கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் நகர்வுகள் எதுவும் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும தெரிவிக்கப்படுகின்றது. ஆனால்அதற்கான சாத்தியங்கள் அண்மைக் காலத்தில் இருக்கின்ற மாதிரியாக தமக்குத் தெரியவில்லையென விடுதலைப் புலிகளின் தரப்புக்கள் தெரிவிக்கின்றன. (அ-9)

## அமைச்சர் அதாவுட மலேசியா பயணம்

மலேசியாவில் உள்ள இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு முன்வந்துளளது.

இதுபற்றி மலேசிய அமைச்சர்களுடனும அங்குள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கென அமைச்சர் அதாவுட செனவிரத்ன நாளை திங்கட்கிழமை மலேசியாவுக்கு பயணமாகவுள்ளார். (ந-9)

## விளையாட்டு விழா

சித்தன்கேணி பாலர் பாடசாலையில் 41 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. திருமதி கோமளவல்லி தங்கராசா தலைமையில் சித்தன்கேணி பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவாச்சாரிய சிரோனமணி சிவஸ்ரீ ச. குமாரசாமி லம்போதரக குருக்கள் கலந்துகொள்வார். (ந-49)

## மேல் கொத்மலைத் திட்டம் அமுல்; பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரணம்

(கொழும்பு)

மேல் கொத்மலை நீரமின் உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்போது வீடுகள், சொத்துக்களை இழந்தவாகளுக்காக அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடுகளை வழங்கத் தீர்மானித்துள்ளதாக மின்வலு எரிசக்தி அமைச்சரின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட குடும்பங்களைக குடியமர்த்துவதற்காக நான்கு பாதுகாப்பான பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பட்ட செயற்றிட்டத்திற்கு தலவாக்கலை நகரை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்கள் சிலவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும் இந்த நீரமின் உற்பத்தித் திட்டம் நடை முறைப்படுத்தப்படுவதன் மூலம் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் தொடர்பான உறுதிப் பத்திரம் ஒன்றை வழங்கவுள்ளதாகவும் மின்வலு எரிசக்தி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (ந-2)

## பரு.ஆதார வைத்தியசாலையில் செயற்பட ஆரம்பித்துள்ள இரத்த வங்கி!

(துன்னாலை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மூன்று வருட இடைவெளிக்குப் பின்னர மீண்டும் இரத்த வங்கி செயற்பட ஆரம்பித்துள்ளது.

மேற்படி இரத்த வங்கி இதுவரைகாலமும் செயற்படாதிருந்ததால் நோயாளிகள் பெரிதும் அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தனர். குறிப்பாக கர்ப்பிணித்தாய்மார் இரத்தப் பரிசோதனைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்குச் சென்று பரிசோதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அண்மையில் பதவியேற்ற சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் முயற்சியினால் தற்போது இவ் இரத்தவங்கி மீண்டும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு முதற்கட்டமாக தற்போது கர்ப்பிணிகளுக்கு இரத்தப் பரிசோதனைகள் இடம்பெறுவதாகவும், காலப்போக்கில் இரத்த சேமிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்படுமெனவும் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சின்னத்தம்பி தெரிவித்தார்.

இதேவேளை, மேற்படி வைத்தியசாலையல் முன்பு இயங்கிவந்த எக்ஸ்ரே பிரிவும் பல வருடங்களாகச் செயற்படாத நிலையில் நோயாளிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்கே செல்லவேண்டிய நிலை உள்ளதுடன், தனியார் நிலையங்களிலும் பணம் கொடுத்து எடுக்க வேண்டியுள்ளதாவும் பொதுமக்கள் தரப்பில்

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்

## தொடர்ந்தும் கடல் கொந்தளிப்பு! பெரும் பீதியில் கடலோர மக்கள்!





(நாகர்கோவில்)

குமரி மேற்கு கடலோர பகுதியில் கடந்த புதன்கிழமை கடல் கொந்தளித்ததால் அப் பகுதியில் மக்கள் பெரும் பீதியில் உள்ளனர்.

குமரி கடலோரப் பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் தேதி பேரலைகள் தாக்கின. அவைகள் பெரும் உயிர்சேதத்தையும் பொருட் சேதத்தையும ஏற்படுத்தின.

அந்தப் பெரும் துயரத்தை மறந்து மக்கள தங்கள் பணியை செய்துவரும் நிலையில் அவ்வப்போது கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு மக்களை அச்சுறுத்தி வருகின்றது. கடந்த 20ஆம் திகதி குமரி மாவட்ட கடற்கரைப் பகுதியில் கடல கொந்தளிப்பு ஏற்பட்டது. அதனால் ராஜாக்கமங்கலம்துறை முதல் நீரோடி வரையிலான கடலோர கிராமங்களில் கடல் நீர் புகுந்தது. இதனால் அந்தப் பகுதி மக்கள பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

நிலைமை சீரானதை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை முதல் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்றனர். அந்த அமைதி நிலைமை தொடர்ந்து நீடிக்கவில்லை. கடந்த புதன்கிழமை மண்டும் கடல் அங்கு கொந்தளிப்பு ஏற்பட்டது. 20 அடி உயரத்துக்கு இராட்சத அலைகள் எழுந்தன.

தேங்காய்ப்பட்டணம் பகுதியில் கடல் அரிப்பைத் தடுக்க கற்கள் போடப்பட்டு இருந்தன. அவைகளைச் சிதறடிக்கும் அளவுக்கு கடல் அலையின் சீற்றம் இருந்தது.

தாமிரபரணி ஆறு கலக்கும் கழிமுக பகுதி வழியாக நீர் கடலோரப் பகுதி தென்னநதோப்புக்குள் புகுந்தது. இதைப்போல அந்தப் பகுதியில் உள்ள மசூதிககுள்ளும் கடல் நீர் புகுந்து விட்டது. கடலின் சீற்றம் இன்னும் தணியவிலலை. தொடர்ந்து கடல் கொந்தளிப்பாக உள்ளது.

மார்த்தாண்டம் துறையில் 179 வீடுகள் உள்ளன. அங்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மககள் வசித்து வருகிறார்கள். கடந்த புதன்கிழமை கடலில் ஏற்பட்ட சீற்றத்தைத் தெடர்ந்து அங்குள்ள மக்கள் வெளியேற்றப்படடனர். தொடர்ந்தும் கடல் கொந்தளிப்பாகவேயிருந்தது. எனவே வீடுகளில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் வீடுகளுககுத் திரும்பவில்லை. தொடர்ந்து அவர்கள பீதியுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

கடலோரப் பகுதியில் சூறைக்காற்று வீசுகிறது. இதனால் அங்கு யாரும் செல்ல அஞ்சும் நிலைமை ஏற்பட்டு இருந்தது.

வல்லவிளை, நீரோடி, தேங்காய்ப்பட்டணம, முள்ளூர்துறை, புத்தன்துறை கடல் தொடர்ந்து கொந்தளிப்பான நிலையில உள்ளது. இதனால் அந்தப் பகுதி மீனவர்கள் பாதுகாப்பான இடங்களுககுச் சென்று விட்டனர். அவர்கள் கடற்கரைப் பகுதிக்கு வந்து நிலைமையைக் கண்காணித்துச் செல்கின்றனர். இப்படிப்பட்ட சூழ் நிலையில் கடலோரப் பகுதி மக்கள் பீதியுடன் தங்கள் வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். (ந)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அலகின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது 3ஆம் வருட கற்கைநெறியை எதிர்பார்த்து நிற்கும் சகல மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக கொள்ளப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

நிலையங்களிலும் பணம் கொடுத்து எடுக்க வேண்டியுள்ளதாவும் பொதுமக்கள் தரப்பில் குறைகூறப்படுகிறது.

குறித்த எக்ஸ்ரே பிரிவுக்குரிய சகல இயந்திரங்கள் இருக்கின்றபோதிலும் அதனைச் செயற்படுத்தக்கூடிய தகுதியான நிபுணர் இன்மையாலேயே அப்பிரிவு தற்போது மூடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

எனவே, அதனையும் நிவர்த்தி செய்து தருமாறு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளரிடம் பொதுமக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-101)

அலையின் சீற்றம் இருந்தது.

வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். (ற)

## காரைநகர் பிரதேச சபைக்கு
# 2.5மில்லியன் பெறுமதியான
# தண்ணீர் பவுசர் கையளிப்பு

(காரைநகர்)

காரைநகர் பிரதேசசபைக்கு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான தண்ணீர் பவுசர் ஒன்று தேசிய நீர் வழுங்கல் வடிகால் அமைப்புச் சபை மூலம் வழ்ங்கப்பட்டுள்ளது,

இத தண்ணீர் பவுசர் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட வடமாகாண தேசிய நீர்வழங்கல வடிகால் அமைப்புச் சபையின் இயந்திரப் பொறியியலாளர் வ.அ.சித்திரவடிவேல் கருத்துத் தெரிவிக்கையில்,

இத் தண்ணீர் பவுசர் ஜப்பான் நாட்டு அரசினால் நன்கொடையாக தேசிய நீர்வழங்கல் வடிகால் சபைக்கு வழங்கப்பட்டது.

காரைநகர் மக்களிற்கு குடிநீர் வழங்குவதற்குப் போதியளவு தண்ணீர் பவுசர் இல்லையென பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனால் இதற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சுட்டிக் காட்டியதையடுத்து தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினூடாக காரைநகர் பிரதேச சபைக்கு இப் பவுசர் வழங்கப்பட்டுள்ளது.

இப் பவுசர் 8 ஆயிரம் லீற்றர் கொள்ளளவைக கொண்டது. தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் நீர் விநியோகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வரை காரைநகர் மக்களுககு குடிநீர் வழங்குவதற்காக தற்காலிகமாகவே இது வழங்கப்பட்டுள்ளது. என்றார். (ற-246)

# முதுகுவலிக்கு அறுவைச் சிகிச்சை தவிர்க்குமாறு டாக்டர்கள் அறிவுரை

(இலண்டன்)

முதுகு வலிக்குத் தீர்வுகாண அறுவைச் சிகிச்சையை விட 'பிசியோதெரபி,ஆஸ்டியோபதி' போன்ற மறுசீரமைப்பு முறைகளே சிறந்தவை என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

உலகில் அதிக அளவு மக்களைப் பாதிக்கும் நோய முதுகுவலி. கீழ் முதுகில் ஏற்படும் வலியால் மிக அதிகமான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் நான்கு கோடி தொழிலாளர்கள் முதுகுவலியால் பாதிக்கபபட்டுள்ளனர்.

முதுகுவலி பற்றி இங்கிலாந்து ஒக்ஸ் போர்டில் உள்ள ஆர்த்தோபீடிக் சென்டரைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இது குறித்துத் தற்போது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

முதுகுவலிக்காக அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்தால் ஒருமுறைகது இரண்டு முறை யோசிக்க வேண்டும். முதுகு வலியால் அவதிப்பட்ட 350 பேரிடம் ஆய்வுசெய்ததில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும், அறுவை சிகிச்சை இல்லாமல் பிற சீரமைப்பு வழிகளைப் பின்பற்றியவர்களுக்கும் வித்தியாசம் தென்படடது. நீண்ட நாட்களாக முதுகுவலி இருப்பவர்களுக்கு அறுவைச் சிகிச்சை இல்லாமல தீவிர சீரமைப்பு வழிகளைச் செய்தால் நல்ல பலன் கிடைப்பதாக ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

முதுகுத் தண்டில் தொடர் வலி இருந்த 300 பேர் அதற்கான அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட சில நாட்களிலேயே தீவிர மறுசீரமைப்பு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதேபோல நோய்த் தன்மை அதிகமாக இருந்த 30 பேர் தீவிர மறுசீரமைப்பு செய்து கொண்டதால், நீண்ட நாட்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படவில்லை.

பொருளாதாரசுமை உட்பட எந்தவிதத்திலும் முதுகுவலிக்கு அறுவைச் சிகிச்சை ஒரு நிரந்தர தீர்வாக இல்லை. ஒரு நபர் அறுவை சிகிச்சை செய்துகொள்ள குறைந்தது ஆறு இலட்ச ரூபாய் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் மறுசீரமைப பிற்கு ஒரு இலட்ச ரூபாய் போதுமானதாக இருக்கிறது.

முதுகுத்தண்டில் வலி ஏற்பட முக்கிய காரணம், தண்டுவட இணைப்புகளில் ஏற்படும் பலவீனம், தசைகளில் ஏறபடும் தளர்ச்சி ஆகியவையாகும். இது இளம் வயதினரையும் நடுத்தர வயதினரையும் அதிக அளவில் பாதிக்கிறது.

'பிசியோதெரபி, ஆஸ்டியோபதி, சிரோபடி' மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகிய பல வழிகளில் இந்தப் பிரச்சினைக்கு சிகிச்சை செய்யப்படுகிறது. அறுவைச் சிகிச்சை முறையில், முதுகுத்தணடு பாதிப்புக்கு உள்ளான இடத்தில் தண்டுவடங்கள் இணைக்கப்பட்டு பாதிப்பு சரி செய்யப்படுகிறது.

இது குறித்த முழு விழிப்புணர்வை நோயாளியிடம் ஏற்படுத்த வேண்டியது டாக்டரின் கடமை. இவ்வாறு ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## இன்று ஒரு தகவல்

# இயந்திர வாழ்க்கை

எனது நண்பர் ஒருவர் வந்தார். "ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றி நமது மக்களுக்கு அவசியம் கூறியாக வேண்டும்" என்றார். "என்ன அது?" என்று கேட்டேன். "இந்தக் காலத்தில திருமணமான புதிதில் கணவன் மனைவி இருவரும் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துகிறார்கள். கொஞ்சநாளில் வாழ்க்கை இயந்திரமயமாகிவிடுகிறது" கணவன் மனைவி இரண்டுபேருமே வேலைக்குச் செல்பவர்களாக இருந்துவிட்டால் அது இன்னும் மோசம். குழந்தை பாசம் என்றால் என்னவென்று தெரியாமல் வளாந்து விடுகிறது. இதேநிலைமை நீடித்தால் எதிர்காலம மிகவும் மோசமாகிவிடும் சார்" என்று மிகவும் அடுக்கிக் கொண்டேபோனார். நிறைய அனுபவப்பட்டிருப்பார் போலிருக்கிறது.

இதே கருத்தை சில காலத்திற்கு முன்பு வெளியூரிலிருந்து வேறு ஒருவரும் எழுதியிருந்தார். கணவனும் மனைவியும் ஒரு நாளில் கொஞ்ச நேரமாவது செலவழித்து ஒருவா உணர்வை மற்றவர்கள் புரிந்து நடந்தால் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்குமே? என்று எழுதியிருந்தார் அவர். இல்வாழ்க்கை இயந்திர கதியாக் ஆகிவிட்டால் நிலைமை என்ன ஆகும் என்பதை புரிந்து கொள்ள ஒரு புராணக்கதையையும் எழுதி அனுப்பியிருந்தார். அந்தக் கதையை இப்போது உங்களுக்குத் தருகிறேன்.

வாசஸ்பதிமிச்ரர் என்று ஒருவர் வடமொழிக் கவிஞர் இவர். பொழுது விடிந்து பொழுது போனால் எழுதுவதுதான் அவரது வேலை. வாழ்நாள் முழுவதையும் இலக்கியங்கள் படைப்பதிலேயே கழித்தவர். ஒருமுறை ஒரு பெரிய நூல் ஒன்றை எழுதிக கொண்டிருந்தார். இரவு நேரம் சிறிய விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருநதது. அந்த வெளிச்சத்தில் நீண்டநேரமாக கண் விழித்து உட்கார்ந்து கொண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் எழுதிக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் பார்த்து பலமாக ஒரு காற்று வீச ஆரம்பித்து விட்டது. விளக்கு அணைந்து விட்டது. கொஞ்ச நேரம் இருட்டு. மறுபடியும் திடீரென்று விளக்கு எரிய ஆரம்பித்தது. விளக்கை ஏற்றியது யார் என்று நிமிர்ந்து பார்த்தார். ஒருவயதான கிழவி நின்று கொண்டிருந்தார். இவர் மிகவும் மரியாதையாக அந்த அம்மாவைப் பார்த்து "நல்ல நேரத்தில் வந்து உதவினாயே! யாரம்மா நீ?" என்று விசாரித்தார்.

அந்த அம்மாவுக்கு ஒரே திகைப்பு "என்ன இது? இப்படிக் கேட்கிறீர்கள்? நான்தான் உங்கள் மனைவி பாமதி" என்றார். "என்ன? என் மனைவி பாமதியா? இவ்வளவு கிழவியாகி விட்டாயா?" என்றார். "ஆமாம்! நானே தான் இப்படி ஆகிவிட்டேன் நமக்கு கல்யாணமாகி 50வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இலக்கியங்கள் படைப்பதிலேயே உங்களுக்கு வயதாகி விட்டது. உங்களுக்குப் பணிவிடை செய்வதிலேயே எனக்கு வயதாகிவிட்டது.

இன்று கொஞ்சம் அசந்து போய் கண்ணை மூடிவிட்டேன். அதுதான் விளக்கு அணைந்துவிட்டது. என்னை மன்னித்து விடுங்கள்" என்றார் மனைவி. இதைக் கேட்டதும் அந்தக் கவிஞர் கலங்க ஆரம்பித்து விட்டாராம். "ஐம்பது வருடவாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்த உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன் தெரியுமா? இதோ நான் எழுதிக் கொண்டிருக்கும் இந்த நூலுக்கு "பாமதி" என்று உனது பெயரையே சூட்டப்போகிறேன் என்றார். அதேமாதிரி சூட்டியும் விட்டார். நூலின் முதல் ஓலையில் "பாமதி" என்று எழுதிவிட்டார். என்ன செய்து என்ன பயன்? 50 வருட இல்வாழ்க்கை இனி திரும்பிவருமா?

இப்படிப்பட்டவர்கள் யாராவது இந்தக் காலத்தில் இருந்தால் அவர்கள் பேசாமல் திருமணம் செய்யாமலே இருந்து விடுவது நலம். திருமணம் செய்யவேண்டுமென்று தீமானித்தால் இல்வாழ்க்கையை முறையாக நடாத்தவேண்டும். இதுதான் மரியாதை. இனிமேலாவது வீட்டில் இயந்திரத்தனமாக நடந்து கொள்பவர்கள் தமது பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள். சில பேர் எந்த அளவுக்கு இயந்திரத்தனமாக இருக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு கணவர் தினமும் காலை உணவு உண்ணும் விதம் எப்படித் தெரியுமா? "டிபன் ரெடி" என்றால் போதும் உடனே செய்தித் தாளைப் பிரித்துக் கையில் வைத்துக் கொள்வார். கண்ணாடியைப போட்டுக்கொள்வார். பேப்பரைப் பார்த்துக் கொண்டே முணுமுணுத்துக் கொண்டிருப்பார். மனைவி ஒரு தட்டில் உணவைக் கொண்டுபோய் அவர் பக்கத்தில் வைப்பார். இவரது கண்ணும் கவனமும் பேப்பரில்தான் இருக்கும். ஒரு கைமட்டும் மெதுவாக டிபன் இருக்கும் இடத்தைத் தேடிக்கண்டுபிடித்து எடுத்து வாயில் போட்டுக்கொள்ளும்.

இதே வழக்கமாக இருந்தது. மனைவி பொறுத்துப் பொறுத்துப பார்த்தார். ஒரு முக்கியமான நாள் வந்தது. அவர்களது திருமண நாள். காலையில் அவர் வழக்கம் போல் டிபன் சாப்பிடப் பேப்பரும் கையுமாக உட்கார்ந்தார். இவர் அருகில் போய் நின்று கொண்டு..."ம் சாப்பிடுங்கள்... சாப்பிடுங்கள்" என்று கூறிக் கொண்டிருந்தார். அவரும் எடுத்துச் சாப்பிட்டார்.

'டிபன் எப்படி இருக்கிறது?' என்று கேட்டார். "கல்யாண நாளென்று இன்று கேக் செய்திருக்கிறாயா? மிகவும் நான்றாக இருக்கிறதே" என்றார் அவர். "கொஞ்சம் முகத்தைத் திருப்பி தட்டில் இருப்பது என்னவென்று பாருங்கள்" என்றார். இவரும் மெதுவாகப் பேப்பரிலிருந்து முகத்தைத் திருப்பித் தட்டைப் பார்த்தார். அங்கே இருந்தது என்ன தெரியுமா? மாட்டுக்கு வைக்கும் புண்ணாக்கு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கஷ்டப் பிரதேசங்களில் ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

## 2030 குடும்பங்களுக்கு தலா 50000 கொடுப்பனவு

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களைக் கவனத்தில் கொண்டு ஒரு இலட்சம் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கபபட்டுள்ளதாக ஜனாதிபதிசெயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு அமைச்சின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு ஆய்வுகளை நடாத்தும் பொறுப்பை ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

சமுர்த்தி அமைச்சின் கீழ் தற்போது நடைமுறைப் படுத்தபபடும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதிய அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாகவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய அபிவிருத்தித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.இதன்படி குடும்பத்தலைவர் இறந்து அல்லது ஊனமுற்றிருக்கும் நிரந்தர வீடுகள் இல்லாத குடும்பங்களுக்கு 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.இதன்படி 290 பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுமுள்ள 2030 குடும்பங்களுக்கு இந்த நிதியுதவி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வழங்கப்படவுள்ளது. (ற-8)

# "தப்ரான்" அமைப்பு பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்ட செயலணியான "தப்ரான்" அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மட்டக்களபபுக்கு விஜயம் செய்திருந்தனர்.

"தப்ரான்" அமைப்பின் பணிப்பாளர் தர்மசிறி விக்கிரமதிலக "தப்ரான்" வாழ்க்கைத் திட்ட ஆலோசகர் ஷேவியாமேல், சர்வதேச தொழில் அமைப்பின் ஆலோசகர் பீற்றர்ஜெரல் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்ட அதிபர் வி.சண்முகம் தலைமையில் நடைபெற்ற மாநாடு ஒன்றிலும் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டின் போது,

சுனாமியால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கி வருமானத்தை ஏற்படுத்த செயலணியொன்றை உருவாக்குவது தொடர்பாக ஆராயப்பட்டது.

இநத செயலணி கிராமிய, பிரதேச மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்ட பின்னர் தேசிய ரீதியில் "தப்ரான்" அமைப்புடன் இணைந்து இது செயற்படவுள்ளது.(ற-8)

# வவுனிக் குளத்தை புனரமைப்பு செய்ய ஆலோசனைக் கூட்டத்தில் கோரிக்கை

(முல்லைத்தீவு)

வட மாகாணத்தில் உள்ள பாரிய நீர்ப்பாசனத் திட்டஙகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக் குள நீர்ப்பாசனத் திட்டமும் ஒன்றாகும். இக்குளம் கடநத 50 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாததால் அது எந்த நேரத்திலும் உடைப்பெடுக்கும் அபாய நிலையிலேயே உள்ளது. ஆதலால் அக்குளத்தின் அணையைக் கட்ட குளத்தைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கமத்தொழில், கால்நடைகள், காணி, நீர்ப்பாசனம் தொடாபான ஆலோசனைக் கூட்டத்தின் முதலாவது கூட்டத் தொடர் பாராளுமன்றக் கட்டடத்தில் அமைச்சர் அனுரா திஸநாயக்க தலைமையில் நடைபெற்றபோது அதில் கலநது கொண்ட வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம கனகரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக் அவர் மேலும் குறிப்பிடுகையில் வடமாகாணத்தில் கட்டுக்கரை, இரணைமடுக் குளங்களுககு அடுத்ததாக உள்ள மூன்றாவது பெரிய நீர்ப்பாசனத் திட்டம் வவுனியாக் குளமாகும். வரலாற்றுப் புகழ் மிக்க எல்லாள மன்னனே கட்டுவித்தான் என்ற சரித்திரம் கூறுகின்றது. இக் குளம புனரமைப்புச செயயப்பட்டு 1958ஆம் ஆண்டு தொடக்கம் 1960ஆம் ஆண்டு வரை அப்பகுதியில் மக்கள் குடியேற்றப்பட்டார்கள். இன்று இக் குளத்து நீரை நம்பி 3000திற்கும்மேறபட்ட குடும்பங்கள வாழ்வதால உடனடியாகவே இக் குளம் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் அவர்வற்புறுத்தினார். (து-128)

# நாயாற்று பாலத்தை செப்பனிட உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்

## கனகரத்தினம் எம்.பி.க்கு பிரதமர் வாக்குறுதி

(முல்லைத்தீவு)

"முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வருடங்களுக்கு மேலாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பல பிரதான வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்ததால் இப்பிரதேச மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். ஆதலால் இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும்"

பாராளுமன்றக் கட்டடத்தில் பிரதம அமைச்சரும் வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் போதே பொறியியலாளர்கள் மத்தியில் பேசும் போது வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார். முல்லை மாவட்டம் ஒரு பரந்த பிரதேசமாகும். இஙகேயுள்ள மிக முக்கிய வீதிகள் நீண்டகாலமாகச் செப்பனிடப்படவில்லை. குறிப்பாக மாங்குளம்-முல்லைத்தீவு வீதி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதி,நெடுங்கேணி- வவுனியா வீதி ஆகியவற்றுடன் சுனாமி அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கொக்குளாய்- நாயாறு வீதியும் நாயாற்றுப் பாலமும் செப்பனிடப்பட வேண்டுமென்பதையும கனகரத்தினம் அக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இக்கோரிக்கைகளை, ஒத்துக்கொண்ட பிரதம அமைச்சர் நாயாற்றுப் பாலத்தையும் குறிப்பிட்ட பிரதான வீதிகளையும் செப்பனிட உடனடியாகவே நடவடிககைகள் மேற்கொள்ளப்படும் என உறுதியளிததார். (து-128)

## மின் ஒழுக்கு தீ விபத்து கடை எரிந்து நாசம்




(கந்தர் மடம்)

கந்தர் மடம் அரசடி வீதியில் உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் ஒட்டும் தொழிலகத்தில் மின் ஒழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தீவிபத்தில் கடை முற்றாக எரிந்து நாசமாகியது .

யாழ்.மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவினர் விரைந்து தீயை வேறு கட்டடங்களுக்குப் பரவாது தடுத்தனர். (ற-12)

## கியூமெடிக்கா நிறுவனம் 57 படகுகளை வழங்கியது

(திருநெல்வேலி)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு கியூமெடிக்கா நிறுவனத்தால் நேற்று முன்தினம் சக்கோட்டைப் பகுதியில் வைத்து 57 படகுகள் கையளிக்கப்பட்டன.

இதில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மூன்றரைத் தொன் நிறையுடைய பெரிய படகுகளை வைத்திருந்த மீனவர்களுக்கு படகுகள் வழங்கப்பட்டன.

வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், சுனாமி அனர்த்த செயலணியைச் சேர்ந்த பாலையா, கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் பாதர் சாம் ராஜசூரிய ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-43)

# அமுதே

## திரை விமர்சனம்

தினகர் - நான்சி இணைபிரியாத காதலர்கள். சூழ்நிலை இருவரையும் பிரிக்க ஜோடி மாறுகிறது. நான்சி தொழில் அதிபரை மணக்கிறாள். தினகர் அத்தை மகளைக் கைப்பிடிக்கிறான்.

என்றாலும் தாம்பத்திய உறவுக்கு இடம்கொடுக்காமல் திருமண பந்தத்தை முறித்துக்கொண்டு, மீண்டும் புதிதாக ஜோடி சேர இருவரும் திட்டம் தீட்டுகிறார்கள்.

காத்திருந்த அந்தக் காலம் கனிந்து வந்ததா.. முடிவு உச்ச கட்டம்.



தினகர் - நான்சியாக வாழ்ந்து காட்டியிருக்கும் ஜெய்ஆகாஷ் - மதுமிதா ஜோடி கச்சிதம் ஊடல், கூடல், ஏக்கம், இணக்கம், நெருக்கம் எல்லாவற்றிலும் ஒன்றாகக் கைகோர்த்து நடந்திருக்கிறார்கள்.

காதலர்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்.. என்று சொல்ல வைத்து.. பிரியும் போது உருக வைத்திருக்கிறார்கள். உயிரோட்டமான காதல் பிணைப்பு. விரும்பிய மனைவி கிடைத்த போது மகிழ்ந்து.. அவள் விவாகரத்து கேட்கும்போது அதிர்ந்து... நிரந்தரமாகப் பிரியும்போது நெகிழ்ந்து பரவசப்படுத்தும் பிரகாஷ்ராஜ் பிரகாசிக்கிறார். கட்டிய கணவனுக்கு மனைவியாக, மாமா - அத்தைமெச்சும் மருமகளாக அசத்துகிறார் உமா. கவர்ச்சியை நம்பாமல் கதைக்கு உயிரோட்டமாக பாசத்தைப் பொழிந்து திணறவைக்கிறார்.



டெல்லி கணேஷ் நெல்லை கணேசாக வந்து நிஜப்படுத்தியிருக்கிறார். தாமு கிடைத்த வாய்ப்பில் கிச்சுக்கிச்சு மூட்டிப் பார்த்திருக்கிறார். என்றாலும்... காதல் உருக்கத்தில் அது கரைந்து போய்விடுகிறது. எம்.எஸ்.பாஸ்கர், சந்தானபாரதி, ரஞ்சிதா, ரகசியா, அனாமிகா, பாத்திமா பாபு, ராஜசேகர், பாண்டு சத்யபிரியா, குயிலி ஆகியோரும் உள்ளனர்.

மணிமாலாவின் கதைக்கு ஆத.சிவகுமாரின் ஒளிப்பதிவு வளம் சேர்த்துள்ளது. புதிய இசையமைப்பாளர் சுனில், சுகமான இசையில் காட்சிகளைப் பதிய வைக்கிறார். பாடல்கள் பளீர் ரகம். திரைக்கதை, இயக்கத்தால் காதல் உணர்வுகளுக்கு மேலும் சிறப்புசேர்த்திருக்கிறார் எழில். காதலர்கள் நெஞ்சில் நிலைக்கும் சுவை - அமுதம்.

'தாஸ்'

ஜெயம் ரவி, ரேஹாகாமேனன்



## பச்சைக்கொடி காட்டினார் சிவகுமார்

ஜோ....கா நடிகையின் பெயரையே தனது மகன் சூர்யா வேத மந்திரமாக சொல்லிக்கொண்டிருந்ததால் சில காலம் மகனிடம் கா விட்டுக் கொண்டிருந்த சிவகுமார், திடீரென்று ஒருநாள் மகனை அழைத்து பச்சைக்கொடி அசைத்ததோடு, என்றாலும் தங்கை திருமணம் வரை நீ பொறுமை காக்க வேண்டும் என்றும் கண்டிஷன் போட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## 'கண்பேசும் வார்த்தைகள்'

சோனியா அகர்வால் முதன் முதலாக கன்னடப் படத்தில்தான் கதாநாயகியாக அறிமுகமானார்.

கன்னடத்தில் ஒரே ஒரு படத்தில்தான் நடித்திருந்தார். அதற்குப் பிறகுதான் தமிழில் 'காதல் கொண்டேன்' படத்தில் அறிமகமாகி தொடர்ந்து 'கோவில்', 'மதுர', '7ஜி ரெயின்போ காலனி' போன்ற படங்களில் நடித்து முன்னணி கதாநாயகி அந்தஸ்து பெற்றார்.

அவர் நடித்த கன்னடப்படம் தமிழில் 'கண்பேசும் வார்த்தைகள்' என்ற பெயரில் மொழிமாற்றம் செய்யப்படுகிறது. கதாநாயகனாக சுதீப் நடிக்கிறார். இவர், விக்ரம் நடித்த படங்கள் கன்னட மொழியில் ரீமேக் செய்யப்பட்டபோது அதில் கதாநாயகனாக நடித்து முன்னணி நடிகராக இருக்கிறார். இந்தப் படத்தில் மீனாட்சி, உமாஸ்ரீ, சித்ரா, ராமிரெட்டி, ரஞ்சித் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

ஒளிப்பதிவு - சுந்தரநாத், இசை -குருகிரண், பாடல்கள் - காதல்மதி, முத்துலிங்கம், எடிட்டிங் - மோகன், வசனம் - குலோத்துங்கன், கதை, திரைக்கதை, டைரக்ஷன் - அருண் பிரசாத், தயாரிப்பு - சரோஜா ஜெயராம். இளமையான காதல் கதை 'கண் பேசும் வார்த்தைகள்'.

* 'வீரசாமி' படத்தில் டி.இராஜேந்தர் ஜோடியாக மும்தாஜ் நடிக்கிறார்.

## நிலாவின் நோக்கம்

'ஆ-ஆ' படத்தின் நாயகி நிலாவுக்கு தமிழில் 'நம்பர் வண்' இடத்தை பிடிப்பதுதான் நோக்கமாம். அதற்கு என்னென்ன யுக்திகளைக் கையாண்டால் எளிதில் இலக்கை அடைய முடியுமோ அப்படிப்பட்ட திரைமறைவு கலாசாரங்களைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டாராம் நிலா. இதற்கு நடிகையின் பெற்றோரும் முழு ஒத்துழைப்பாம்.




## தமிழ் சினிமாவில் நடிக்க வரும் ஆர்த்தி அகர்வால்

தெலுங்குப் பட உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியவர் ஆர்த்தி அகர்வால். இவருக்கும் நடிகர் தருணுக்கும் ஏற்பட்ட காதல் குறித்து விதவிதமாக செய்திகள் வெளிவந்தன. இந்த நிலையில் ஆர்த்தி விஷம் குடித்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இது தெலுங்குப் பட உலகை உலுக்கியது. காதல் தோல்விதான் இத் தற்கொலை முயற்சிக்குக் காரணம் என்று கூறப்பட்டது. இரு தரப்பில் இருந்தும் இந்தச் சம்பவத்துக்கு விளக்கம் சொன்னார்கள். பல்வேறு கோணங்களில் விமர்சனங்கள் வெளியாகின.

தற்கொலை முயற்சி சம்பவத்துக்குப் பிறகு ஆர்த்தி அகர்வால் சினிமா ரசிகர்களிடையே பிரபலம் ஆகிவிட்டார். சமீபத்தில் இவர் நடித்து வெளியான தெலுங்குப் படம் 'சொக்கடு' வெற்றிகரமாக ஓடி நல்ல பெயரை வாங்கி கொடுத்திருக்கிறது. இதையடுத்து தமிழுக்கு ஆர்த்தியைக் கொண்டுவர முயற்சி நடந்தது. ஆர்த்தி அகர்வாலும் தமிழ்ப்பட உலகுக்கு வர ஒப்புக்கொண்டு விட்டார். முதன் முதலில் நடிகர் ஸ்ரீகாந்துக்கு ஜோடியாக தமிழில் 'பம்பரக் கண்ணாலே' படத்தில் அறிமுகமாகிறார்.

ஆர்த்தியின் தமிழ்ப்பட பிரவேசத்தால் தமிழுக்கு வந்துள்ள தெலுங்கு நடிகைகள் அதிர்ச்சியில் இருப்பதாக கோடம்பாக்கம் வட்டாரம் கூறுகிறது.



'அந்நியன்'

விக்ரம், சதா

## மீண்டும் ...

'கொடுவா மீசை அரு...
மீண்டும் தயாராகிவிட்டார். '...
யாகவும், நோக்கியா விளம்...
விக்ரம் தனது அடுத்த படத்...
சமீபத்தில் 'தொம்மனும்...
நடித்து வெளிவந்த படத்தை...
தரரார்களான இவர்கள் இரு...
கலப்பான, அதேசமயம் ஒரு...
சிறுசிறு திருட்டுக்களில் ...
தமிழில் விக்ரமுடன் பசுப...
வண்ணன். நீண்ட நாட்களு...
சிறப்பு. 'தம்' படத்தைத் ...
தயாரிக்கிறாராம்.
'மும்பை எக்ஸ்பிரஸ்' ...
விக்ரமின் சகோதரராக வ...
கைகோர்த்து காமெடியில் ...
ஜோடி 'கல்யாணம் கட்டிக்...
யாம். தெலுங்கில் மட்டுந்...
வுடனே ஒத்துக்கொண்டார...



'இங்கிலீஸ்...
சத்யராஜ், ...

## நான் ரஜினியின் தீவிர ரசி...

'சந்திரமுகி' படம் வந்த பிறகு நயன்தாராவின் நட்சத்...
திருக்கிறது. 'ரஜினி' என்று சொல்லிவிட்டாலே.. 'ஓகோ...
நான் ரஜினி சாரின் தீவிர ரசிகை. அனேகமாக அவர் ...
விட்டேன். 'சந்திரமுகி' படத்தில் நடிப்பதற்காக டைரக்டர் ...
அளவுகடந்த மகிழ்ச்சி அடைந்தேன்.
ஜோதிகாவும் இதில் கதாநாயகியாக நடிக்கிறார் என்...
கையில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு என்...
இந்தப் படத்தில் பங்கேற்ற எல்லாக் கலைஞர்களின் ப...
எனது நடிப்புத்திறமை பளிச்சிடும் வகையில் அவர் என...
சொல்லிக் கொடு...
அவரைப்போலவே அ...
என்பதில் அக்கறை...
ஒரு ஆசிரியர் போ...
பொருத்தமாக இரு...
அதில் கிராமத்து...
பாத்திரத்தின் தே...
தற்போது 'ந...
வோடும், 'கள்வன...
நான் நல்ல ...
பாடும் விதிக்கவி...
மலையாளம் ...
தமிழில் நடிப்பது ...
இங்கு என...
ரசிகர்கள் நட்பு...

# மீசையை முறுக்கும் சீயான்



...வா பார்வை' என்று மீசையை முறுக்கிய சீயான்
'அந்நியன்' படத்தில் அய்யங்கார் வீட்டுப் பிள்ளை
...ர மாடல் போன்ற மார்டன் வேடத்திலும் கலக்கிய
...த்திற்கு மலையாள சினிமா பக்கம் திரும்பியுள்ளார்.
...ம் மக்களும்' என்ற பெயரில் மம்முட்டி மற்றும் லால்
...த தமிழில் எடுக்கப் போகிறார்கள். படத்தில் சகோ
...நவரின் தந்தையாக வரும் ராஜன் பி.தேவ் கல
...ரு கிராமத்து மனிதர். ஒவ்வொரு ஊராகச் சென்று
...டுபட்டு கலாய்ப்பதுதான் இம்மூவரின் வழக்கம்.
...தி நடிக்க தந்தையாக அரிதாரம் பூசுவது மணி
...ளுக்குப் பின்பு மணிவண்ணன் நடிப்பது இதன்
... தயாரித்த ராக்லைன் வெங்கட்டேஷ் இப்படத்தை

... படத்தில் காமெடியில் கலக்கிய பசுபதி இப்படத்தில்
...ருகிறார். 'தூள்' படத்தில் முறைத்தவர், இப்படத்தில்
... பின்னப் போகிறாராம். இந்தப் படத்தில் விக்ரமின்
...க்கிட்டு ஓடிப்போகலாமா' என்று கலக்கிய 'சாமி மாமி
...தான் நடிப்பேனென்று சொன்னவர் கதையைக் கேட்ட
...ராம்.

## சினிமாச் சிதறல்



வீரண்ணா
நெப்போலியன் - ப்ரீத்திவர்மா



...ல்காரன்'
..., நமீதா

# 'டிராக்' மாறும் ஜெயம் ரவி

'ஜெயம்' படத்தில் தனது முதல் வெற்றியை பதித்த ஜெயம் ரவி தொடர்ந்து காதல், அக்ஷன் படங்களில் மட்டுமே நடித்துக்கொண்டிருந்தார்.

இப்போது 'டிராக்' மாறுகிறார். அடுத்து சரண் இயக்கத்தில் அவர் நடிக்கும் 'இதயத் திருடன்' படத்தில் அவருக்க காமெடி வேடம். ஜோடியாக நடிப்பவர் காம்னா.

இந்த படத்துக்கு நகைச்சுவை வசனத்தை கிரேஸி மோகன் எழுதுகிறார். புதிய 'டிராக்'குக்குத் தாவும் ஜெயம் ரவியிடம் 'இதயத் திருடன்' பற்றிக் கேட்டபோது....


இந்தப் படமும் காதலை மையமாக வைத்துத்தான் எடுக்கப்படுகிறது. என்றாலும் காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார்கள். சென்டிமென்ட், காதல் காட்சிகளில் நடிப்பது சுலபம். ஆனால் நகைச்சுவை வேடத்தில் நடிப்பது சிரமம் என்பது எனக்குத் தெரியும்.

என்றாலும், காமெடியிலும் முத்திரை பதிக்கும் வகையில் என் முழு திறமையையும் காட்டி ஜெயிப்பேன் என்றார் சிரித்துக்கொண்டே. காமெடி, கைகொடுக்குமா...?

* அந்நியன் படத்துக்கு ஷங்கர் ரூ. 5கோடி சம்பளம் வாங்கி இருக்கிறார்.


*சந்தியா நடிக்கும் புதிய படம் 'நானும் என் சந்தியாவும்' பூபதி பாண்டியன் இயக்கத்தில் உருவாகும் இந்த படத்தில் கிரேஸ் கருணாஸ் காமெடி நடிகையாக அறிமுகமாகிறார்.

# ...கை - நயன்தாரா



...சத்திர அந்தஸ்து பல மடங்கு உயர்ந்
...ா' என்று புகழ ஆரம்பித்துவிடுகிறார்.
... நடித்த எல்லாப் படங்களையும் பார்த்து
...ர் பி.வாசு என்னை அழைத்தபோது


...றதும் இது எனது திரையுலக வாழ்க்
...ன்று பூரித்துப்போனேன். ரஜினி சார்,
...பணியிலும் முழு அக்கறை காட்டினார்.
...னக்கு ஏராளமான நுணுக்கங்களைச்
...டுத்தார். படப்பிடிப்பு தளத்தில் அவர் தனது இருக்கையில் உட்காரமாட்டார்.
... அவருடன் நடிக்கும் மற்ற நடிகர்களின் திறமையும் முழுமையாக வெளிப்படவேண்டும்
...றுடன் இருப்பார். இதை வெளிப்படையாகவே சொல்வார். அவர் எங்களுக்கு
...பால ஆலோசனை கூறினார். நான் மூத்த கதாநாயகர்களுடன் நடிப்பதற்குத்தான்
...ருப்பதாக சிலர் கூறிவருகிறார்கள். 'அய்யா' படத்தில் நான் அறிமுகமானபோது
...துப் பெண்ணாக நடித்தேன். அதற்கு ஏற்ப எனது முடி அலங்காரத்தையும்
...தோற்றத்திற்கு ஏற்ப மாற்றி இருந்தேன்.
... நான் 'வல்லவன்' படத்தில் சிம்புவுடனும், 'கஜினி' படத்தில் நடிகர் சூர்யா
...னின் காதலி'யில் டைரக்டர் எஸ்.ஜே.சூர்யாவுடனும் ஜோடியாக நடிக்கிறேன்.
...ல பாத்திரங்களையே எதிர்பார்க்கிறேன். கவர்ச்சியாக நடிப்பதற்கு எந்த கட்டுப்
...வில்லை. கதைக்குப் பொருத்தமாக இருந்தால் நடிப்பேன்.
...ம் எனது தாய்மொழி. எனவே அந்த வசனம் முழுமையாகப் புரியும். ஆனால்
...து வித்தியாசமானது என்றாலும் இரண்டு பட உலகிலும் நடிப்பு ஒன்றுதான்.
...னக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. என்னிடம் தமிழ்நாட்டு
...டன் பழகுகிறார்கள் என்று பூரித்துப்போகிறார் நயன்தாரா.



'கள்வனின் காதலி'
எஸ்.ஜே.சூர்யா-நயன்தாரா

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள் 5

## கலாநிதி செ.திருநாவுக்கரசு



சிங்களவருக்கு அடுத்ததாக எண்ணிக்கையில் அதிகமானோர் இலங்கைத் தமிழர்களாவர். இந்திய வம்சாவழித் தமிழர்களின் கணிசமான வீதத்தினரின் இந்தியாவுக்கான இடப்பெயர்வு, 1970வரையிலிருந்து ஆரம்பமாவதற்கு முன்னர் அவர்களது எண்ணிக்கையானது இலங்கைத் தமிழரிலும் அதிகமாயிருந்தமை நோக்குதற்குரியதாகும். இலங்கைத் தமிழர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அதிகமாகவும், கொழும்பு வடமேல் மாகாணப் பகுதிகளில் கணிசமாகவும், ஏனையபிரதேசங்களில் சிதறலாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். புத்தளத்திலிருந்து நீர்கொழும்பு வரையிலான வடமேற்குக் கரையோரங்களில் இலங்கைத் தமிழர் செறிவாக வாழ்ந்துவந்த போதிலும், கத்தோலிக்க திருச்சபையின் கட்டளையொன்றினால் பெரும்பாலான கத்தோலிக்க தமிழர்கள் சிங்களத்தை தாய் மொழியாகக்கொண்டமையும், சூழ்நிலைகளின் தாக்கங்களும் இணைந்து தமிழர்களின் வீதாசாரத்தினை அங்கு குறைவடையச் செய்துள்ளதெனலாம். பொருளியல் முன்னேற்றத்துக்காகவும் சமூகத்தில் உயர்நிலை பெறுவதற்காகவும் ஆங்கிலமும் ஐரோப்பியக் கல்வியும் தமிழர்களுக்கு நல்லதொரு ஊடகமாய் அமைந்தன. பொருளாதார நலன்களுக்காகவும் வேலைவாய்ப்புக்களுக்காகவும் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் சிங்களவர் அதிகமாக வாழுகின்ற பகுதிகளில் வசிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் 72.6வீதமான இலங்கைத் தமிழர்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே வாழ்கிறார்களென்பதைப் புள்ளிவிபரங் காட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேயராட்சிக் காலத்தின்போது, பெருந்தோட்டங்களில் கூலிகளாக வேலை செய்வதன் பொருட்டு கி.பி. 1828இலிருந்து படிப்படியாகத் தரகர்கள் மூலம், ஆசைவார்த்தை காட்டி இந்தியத் தமிழர்கள் தென்இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர். இந்திய அரசாங்கமானது இலங்கைக்கான குடிபெயர்தலை 1939 ஆம் ஆண்டு தடைசெய்யும் வரையிலும், இவ்வருகையானது தொடர்ந்தது. கடினமான கட்டுப்பாடுகளின் மத்தியில், எத்தனையோ இடர்களைத்தாண்டி ,மலையகத்தில் குடியேறப்பட்ட இவர்களது வாழ்க்கையானது சமீபகாலம் வரையிலும் மகிழ்ச்சி தருவதாக அமைந்திருக்கவில்லை. இலங்கையின் ஏனைய இனத்தவர்கள் அனுபவிக்கும் உரிமைகளும், சலுகைகளும் இவர்களுக்கு நீண்டகாலமாகவே மறுக்கப்பட்டேவந்தன. 1930இல் தொழிற்சங்கவாதியான கோ. நடேசய்யர் அவர்களும்,அதன் பின்னர் லங்கா சமஜமாஜக் கட்சியும் இந்தியத் தமிழர்களை நிறுவன ரீதியாக ஒன்றிணைக்க் முயற்சி செய்தனவெனினும், 1939ஆம் ஆண்டு பண்டிட் ஜவகர்லால் நேருவினால் தொடக்கி வைக்கப்பெற்ற இலங்கை- இந்தியர் காங்கிரசும், அதன் வழிவந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவையுமே தோட்டத்தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதில் வெற்றி கண்டனவெனலாம்.

இந்தியத் தமிழர்கள் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் அதிகமாக வாழுகின்றார்கள். மேலும் கொழும்பு,கண்டி, நீர்கொழும்பு, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, நுவரெலியா போன்ற நகர்ப்புறங்களில் தொழிலாளர்களாகவும், வர்த்தகர்களாகவும், பொற்கொல்லர்களாகவும், பவுண் தரகர்களாகவும் வாழ்கின்றார்கள். இருந்த போதிலும் 60 வீதத்திற்குமதிகமானோர் மத்திய மலையகப் பகுதிகளில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கைத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் மொழி, மத பண்பாட்டு அம்சங்களில் ஒருமித்தவர்களாயிருப்பினும் ,புவியியல் ரீதியான அமைப்புகளும், தனித்துவமான நடைமுறைக்கூறுகளும் எல்லாவற்றினும் மேலானதான அரசியல் அழுத்தங்களும் சேர்ந்து இரு பகுதியினரையும் இணைத்து வைப்பதில் சாதகமான பயன்பாடுகளைப் பெற வழிவகுக்கவில்லை. அரசியலார் சுயநலமிக்க தமது அரசியல் ஆதாயத்திற்காக இலங்கைத் தமிழர் இந்தியத் தமிழர் ஆகிய இருபகுதியினருக்குமிடையே ஒட்டுறவு உருவாவதை விரும்பவில்லைப் போலும், எனினும் இனரீதியான ஆத்மார்த்த உணர்வுகளும் மரபுரீதியான செயற்பாடுகளும் இலங்கை- இந்தியத் தமிழர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நம்பிக்கைகளை அதிகரிக்கவே செய்கின்றன.

அடுத்து நாம், இலங்கையின் தமிழ் மொழி பேசும் குழுவினருள் ஒரு பிரிவான இலங்கை முஸ்லிம்களைப் பற்றிப் பார்ப்போம். இலங்கைத் தீவின் தமிழ் பேசும் மக்களுள் இரண்டாவது பெரும்பிரிவினரான இவர்கள் இலங்கையில் வாழும் மொத்த இஸ்லாமிய சமயத்தவர்களுள் 93.16 வீதத்தினராக அமைவதினால் முஸ்லிம் மக்கள் என்ற பதம் இலங்கையைப் பொறுத்துப் பொதுவாகத் தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையே குறிப்பிடுகின்றது. இதனால் இலங்கையில் இவர்களே அடிப்படை முஸ்லிம் சமூகத் தொகுதியினராவர் எனக் கருதலாம். தமிழ் பேசும் மக்களுள் 28 சதவீதத்தினராகிய இவர்களில் ஏறக்குறைய 40 சதவீதத்தினர் வட கிழக்குப் பகுதிகளிலும், ஏனைய 60 சதவீதத்தினர் சிங்களப் பிரதேசங்களிலும் வாழ்கின்றனர். அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய தமிழ்பேசும் மாவட்டங்களிலாயினும், சிங்களம் பேசும் மாவட்டங்களிலாயினும் இவர்கள், பிளவுபட்ட சமூகப் பின்னணியில் புவியியற் தொடர்ச்சியை இழந்து சிதறிய சமூகத் தொகுதிகளாக வாழ்கின்றனர். பாரம்பரியமான கிராமிய, நகர்ப்புறங்களில வாழுமிவர்கள் தமிழ்ப்பிரதேசங்களில் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் போன்றவற்றிலீடுபடச் சிங்களப் பகுதிகளில் பெரும்பாலும் வர்த்தக முயற்சிகளையே நாடியுள்ளனர். புத்தளம், தேர்தற்றொகுதியில் முஸ்லிம் மக்களது செறிவு ஏனைய சிங்களப் பகுதிகளினின்றும் வித்தியாசமானதாகும். இப்பகுதியில் வடகிழக்கைப் போன்றதான தொடர்ச்சியான வாழ்விடப் பின்னணி இவர்களுக்குண்டு.

இறுதியாக, இலங்கையின் இனக்குழுவினருள் நகரப்புறங்களில் உள்ளூர் மக்களுடன் இணைப்புற்று வாழும் மிகக் குறுகிய தொகையினராகிய பறங்கியரையும் ஏனைய சிற்றினத்தவர்களையும் நோக்கும்போது, அவர்கள் வர்த்தகம் சார்ந்த துறைகளில ஈடுபடுவதும் கொழும்பு ,கண்டி, காலி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற நகரங்களில் வசிப்பதும் தெரிய வருகின்றது. இதுவரையிலும், இலங்கையின் பிரதான இனக்குழுவினரின் இயல்பு நிலைகள் பற்றிய எமது கண்ணோட்டம் அமைந்திருந்தது. மேலே எம்மால் காட்டப்பெற்ற இனக்குழுக்கள் யாவும் ஒரு நாட்டின் தேசிய இனத்துக்கான தகுதி நிலையை உடையனவா? தொடர்ச்சியான பிரதேச அமைவினையில்லாத முஸ்லீம்களும், பறங்கியரும் கூட அதற்கான அருகதையுடையவர்களா? இந்தியத் தமிழர்கள் இலங்கைத் தமிழரினின்றும் வேறானதோர் தேசிய இனமாகக் கருதப்படத் தக்கவர்களா? அல்லது இலங்கைத் தமிழர்களுடன் இணைந்த ஒரே பிரிவினுள் அடங்குபவர்களா? என்பன போன்ற வினாக்கள் பலவும் நம் சிந்தையில் எழக்கூடியனவே. இவற்றினுக்கான பதில்களை இறுப்பதில் கருத்து முரண்பாடுகளே அதிகம் மிஞ்சி நிற்கின்றன. எனவே காலவோட்டத்தின் தொடர்ச்சியில் இவற்றிற்கான விடைகள் தெளிவுபடுத்தப்படுமென்ற நம்பிக்கையுடனும், ஒரு நாட்டின் சகோதர இனக்குழுக்கள் என்ற ஒற்றுமையுணர்வுடனும் சிந்தனையைச் செலுத்துவதே அனைவருக்கும் நலமளிப்பதாகும்.

இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையேயான பிரச்சினைகளின் பிரதான காரணியாகச் செயற்படுவது, சிங்கள-பௌத்த மேலாதிக்கக் கோட்பாடேயாகும். இதற்கு உந்து சக்தியாக விளங்கும் காரணிகளை ஆராய்ந்தாற்றான், இலங்கையின் இனப்பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளவியலும். பல்லினமக்கள் வாழும் இலங்கையில் இந்தச் சிங்கள -பௌத்தத்தின் மேலாண்மை ஏற்படுத்திய தாக்கங்களும் விளைவுகளும் அதிகமானவை. அவற்றின் கொடூரமான சிந்தனைகளும், செயற்பாடுகளும் சிறுபான்மையின மக்களின் சமத்துவத்தை மறுப்பதிலும், அவர்களது உரிமைகளைப் பறிப்பதிலும் உத்வேகங்காட்டியே வந்துள்ளது. சிறிய இனமாயோ அல்லது மதமாயோ இருத்தல் தேசியக் குற்றமோ? என ஐயுறும் அளவுக்குப் பெரும்பான்மையினரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. பண்டைய ஐதீகங்களைப் புதுப்பித்தலிலும் திரிவுபடுத்தப்பட்ட வரலாறுகளைச் சிருஷ்டிப்பதிலும் தேசியப் பெரும்பான்மையினர் ஆர்வங்காட்டியே வந்தனர். இதனால் தங்களது உணர்வுகளின் வைராக்கியத்திற்கு முன்னால் ஏனைய இனத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இளகி நடக்க மறுத்துவிட்டனர். வெறும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகித் தத்தம் மன உந்துதல்களை வரலாறாகவும், கலை, இலக்கியப் படைப்புகளாகவும் வெளிப்படுத்தினர். இந்தப் பின்னணிகளை ஆதாரமாகக் கொண்டு தேசிய எழுச்சியை இயக்கரீதியாகக் கட்டியெழுப்ப வந்த ஆர்வலர்கள் பலரும் வர்க்க உணர்வு களை விட இனமத உணர்வுகளுக்கே முதலிடம் அளித்தனர். தேசம் என்ற பரந்த அர்த்தத்தைக் காட்டிலும் இனம், மதம், ஆகிய குறுகிய வாதங்களை வளர்ப்பதில் முன்னின்றனர். அந்நியரிடமிருந்து மீளப் பெறப்பட்ட இலங்கையின் சுதந்திரமானது,சிறுபான்மை இனத்தவர்களைப் பொறுத்தவரையில் வெறும் ''எசமான் மாற்றம்'' எனக் கருதத்தக்கதாகவே காணப்பட்டது. அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்துவது போல் அரசியற் சட்டங்களும், செயன்முறைகளும் பாரபட்சம் நிறைந்ததாய் விளங்கலாயின. இவற்றின் முறுகல்களாலேயே இருபகுதியினருக்குமிடையே பிரச்சினைகள் முளைக்கலாயின. காலப்போக்கில் அவை வளர்ந்து விருட்சமாகி நிலைகொள்ளத் தொடங்கினமையால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது சிக்கல் நிறைந்ததொன்றாகத் தோற்றம் பூண்டுவிட்டது.

(தொடரும்)

## வலம்புரி
## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☛ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

☛ பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக்காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

☛ பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

☛ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

☛ இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

☛ ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலா ளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண் ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்
திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இணுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

### வடமராட்சி
கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி
நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

### தீவகம்
நெடுந்தீவு
மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

### வன்னி
கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
கனகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# பரிசுத்த இறைவன் ஆளுமை செய்ய எம்மை அர்ப்பணிப்புச் செய்வோம்

மனிதர்கள் தமது உறவை வளர்த்துக் கொள்ள, அதனை மேம்படுத்த பல கொண்டாட்டங்



களை ஏற்பாடு செய்து அதன் மூலம மகிழ்ச்சியடைந்து கொளள முனைகின்றான். இந்தக் கொண் டாட்டங்களில் முக்கியம் பெறுவ தும், நிறைவைத்தருவதும் விருந்து ஆகும். விருந்துகளின் நிறைவே உறவை மேலும் வளர்க்க உதவ கின்றதையும் நாம் அறிவோம். பகையாளர் வீட்டில் நாம் விருந்து உண்ணச் சம்மதிக்கமாட்டோம். எனவே உறவை, நட்பை வளர்க்க உணவு மிகவும் முக்கியமான இடம் வகிக்கின்றது.

இறைவன் தமது அன்பை இரக் கத்தைக காட்ட பாலை நிலத்தில் இஸ்ராயேல் மக்கள் பசியோடு இருந்த வேளை "மன்னா" என்ற உணவை அளித்து அவர்களின் பசிபோக்கினார். இது பழைய ஏற் பாட்டில் இடம்பெற்ற நிகழ்வாகும்.

### இறையரசுப் பணியில்

இயேசு தமது இறையரசுப் போதனையின் போது அவரை விடாது மக்களும் பின் தொடர்ந்து

## பரமபிதா காட்டியபாதை

கொண்டு உணவையும் மறந்தவர் களாக இருந்ததைக் கண்டு அவர் கள் மது மனமிரங்கிப் பலவேளை களில் அம்மக்களுக்கு உண வளித்து அவர்களோடு தமக்குள்ள அன்புதலை வெளிப்படுத்தினார். தந்தையாம் இறைவனின் திரு வுளத்தை நிறைவேற்றுவதே எனது பணி என்றுரைத்தவர் "என் தசையைத் தின்று எனது இரத்தத்தைப் பானம் பண்ணுகின் றவனே என்னில் நிலைத்திருக்கி றான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்த்தெழச் செய் வேன்" (யோவான் 6:56) என்று கூறிய போது அவருடைய சீடர் களில் பலர் இயேசுவை விட்டுப் பிரிந்து சென்றனர்.

இயேசு இவ்வுலகை விட்டுப் பிரியும் நேரம் வந்தபோது சீடர் களோடு இறுதி இராவுணவை உண்டார். அங்கே அவர் அப்பத்தை எடுத்து "இது எனது உடல், இரசக் கிண்ணத்தை எடுத்து இது எனது இரத்தம் இவற்றை என் நினைவாகச் செய்யுங்கள்" என்று முன்பு சொன்ன அதே கருத்துள்ள வார்த்தைகளை இறுதி இராவுண வில் மீணடும் கூறி நற்கருணையை ஏற்படுத்தினார் அந்த நற்கரு ணையே கிறிஸ்தவர்களுக்கு திருப்பலிக் கொண்டாட்டத்தின் போது வழங்கப்படுகின்ற ஆன் மீக உணவாகும். "விவிலியம் என்னும் பாறையிலே தான் நமது குடியரசு கட்டப்பட்டுள்ளது" என்று ஆண்ட்ரு ஜேக்சன் என்னும் இறை யிலானர் குறிப்பிடுகின்றார்.

### திருவார்த்தையும் திருவிருந் தும்

நற்கருணையும், திருவிவிலி யமும் இறைமக்களாகிய எமக்கு ஆன்ம உணவாகத் தரப்பட்டுள்ளன. இறை சமாதானம் எம்மில் நிலைத திட வேண்டின் இறை உறவில் நாம் இணைந்திட வேண்டின் இயேசு பெருமான் எமக்காக விட்டுச் சென்ற வார்ததையும், நற்கருணையும்எமது ஆன்ம உறவாக மாறவேண்டும். அப்போது நாம் இறை உறவில் கலந்து இயேசுவில் நிலைத்தி ருக்க முடியும்.

நற்கருணை அப்பமானது திருப்பலி வேளையிலே வசீகர வார்த்தையின் மூலம் இயேசுவின் திருஉடலாக மாற்றப்படுகின்றது என்பது கிறிஸ்தவர்களாகிய எமக் குத் திருச்சபை கற்பித்துத் தரும் விசுவாச சத்திய உண்மையாகும்.

இதனையே மறைந்த அன்னை தெரேசாவும் இந்தியாவின் பிரதம மந்திரியாக இருந்த ஜவகர்லால் நேரு கேட்ட போது கூறினார். நேரு கேட்டார் "உமது தலைவர் என்று குறிப்பிடுவது யாரை?" என்று. அதற்கு அன்னைதெரேசா நற் கருணையில் வீற்றிருக்கும் இயே சுவைக் குறிப்பிட்டு இவரிடமே நான் நாள்தோறும் பெறும் சக் தியே என்னை வழிநடத்துகின்றது என்று சான்று பகர்ந்தார்.

**அமலன் அருள்தாசன்**

### ஆன்மீக உணவு

ஆன்மீக உணவான திவ்விய நற் கருணையை நாம் தூய்மையான உள்ளத்தோடு, பாவமில்லாத நிலையில் உண்ண வேண்டும். இல்லையென்றால் தகுதியற்ற நிலையில் உண்டதற்கான தண்ட னையை அனுபவிக்க வேண்டும். பரிசுத்த இறைவனை பரிசுத்த நிலையிலே எம் உள்ளத்தில் வர வேற்று அவரே ஆளுகை செய்ய எம்மை அர்ப்பணிப்போம். □

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் பல கிரா மங்களிலும் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துவருகின்றது. இதனால் வலுவற்ற மின்சாரமே பெறப்படுவதாக மின்பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகரின் தோப்புக்காடு, கல்லந் தாழ்வு,வாரிவளவு, தங்கோடை, மாப் பாணவூரி போன்ற கிராமங்களிலேயே பெருமளவானோர் சட்டவிரோத மின்பாவனை பெற்றுவருகின்றனர்.

இச் சட்டவிரோத மின்பாவணையைக் கட்டுப்படுத்தி வலுவான மின்சா ரத்தை வழங்க நடவடிக்கை எடுக் கப்படாதது குறித்து பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப் படுகிறது. (ற-246)

## நினைவஞ்சலி கூட்டம்

(திருநெல்வேலி)

நாட்டுப்பற்றாளரும் மூத்த ஊடக வியலாளருமான அமரர் ஐயாத் துரை நடேசனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நெல்லியடி மத்திய கல்லூரியில் ஊடகவிய லாளர் சங்கத் தலைவர் வே.தவச் செல்வம் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் விடு தலைப்புலிகளின் பிரமுகர்கள் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பத்திரிகையாளர்கள் எனப் பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்தவர்களும் அஞ்சலி உரை களை ஆற்றவுள்ளனர்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில பிற மாவட்ட ஊடகவியலாளர்களின் உரை களும் இடம்பெறவுள்ளன. (ற-43)

## துப்பாக்கி காணாமல் போனமை; சந்தேக நபர்கள் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி கர்பாலா ஆழிப்பேரலை அகதி முகாமில் காவல் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் ரி-56 ரக துப்பாக்கி காணாமல் போன சம்ப வம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான 2 முஸ்லிம்களையும் மட் டக்களப்பு நீதிமன்றம் நேற்றுமுன் தினம் விடுதலை செய்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி குறிப்பிட்ட அகதிமுகாமில் காவல் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ் டபிள் கே.சிவயோகராஜா என்பவ ரின் ரி-56 ரக துப்பாக்கி காணாமல் போனது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் புதிய காத் தான்குடியைச் சேர்ந்த அப்துல் லத்தீப் முகமது பிரதெளஸ், காத் தான்குடி -02 ஐச் சேர்ந்த இஸ்மா யில் மொஹமது, மொகிதீன் ஆகி யோர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அடையாள அணிவகுப்பிற்காக நீதிமன்ற உத் தரவின் பேரில் நேற்றுமுன்தினம் விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்தனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதி பதி எம.ஐ.எம். நூர்டீன் முன்னிலை யில் அடையாள அணி வகுப்பு நடை பெற்றது.

சாட்சிகளான செல்வா நகர் அகதி முகாமைச் சேர்ந்த நாகப் பன் தேவராஜா மற்றும் தங்கராஜா சந்திரன் ஆகியோர் சந்தேக நபர் களை அடையாளம் காட்டத் தவறி விட்டனர்.

தாங்கள் உறக்கதிலிருந்த சம யம் இரு நபர்கள் துப்பாக்கியுடன் ஓடுவதைக் கண்டதாகவும் நேரில் கண்டால் அவர்களை அடையாளம் காட்ட முடியும் என இவர்கள் ஏற் கனவே பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்திருந் தார்கள்.

அடையாள அணிவகுப்பன் பின்பு அடையாளம் காணப்படாத நிலை யில் சந்தேக நபர்கள் இருவரும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்களை விடுவிப்பதற்கான உத்த ரவை நீதிபதி பிறப்பித்தார். (ற-4)


## தடகளப் போட்டி

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்குப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடை யிலான தடகளப்போட்டிகள் அண்மையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலாமிடத்தையும் பருத்தித்துறை சென்தோமஸ் விளையாட்டுக்கழகம் இரண்டாமிடத்தையும், தொண்டைமானாறு விளையாட்டுக்கழகம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

இவ் விளையாட்டுப் போட்டியில் 20 விளையாட்டுக்கழகங்கள் பங்கு பற்றி யமை குறிப்பிடத்தக்கது. (ற-35)





அண்மையில் சமுர்த்தி அதிகார சபையின் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு மடத்து வெளி, ஊரதீவு ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டி திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வேலணைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க. லோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் கிராம சேவையாளர் கு. சந்திரா, தபால் ஊழியர் பா. வரதராசா, சமுர்த்தி முகாமையாளர் மு. சசிகலா, சமுர்த்தி உத்தியோகத்தர் க. அஜந்தன், கி. மல்லிகாதேவி ஆகியோரை முதலாவது படத்திலும் பிரதம அதிதி அவர்கள் மக்களுக்கு குடிநீர் வழங்குவதையும் கலந்து கொண்ட பொதுமக்களையும் மறுபடத்திலும் காணலாம். (படங்கள்:- புங்குடுதீவு நிருபர்)

## எஸ்.பியின் பாராளுமன்ற அங்கத்துவம் ஜுன்-7ஆம் திகதியுடன் காலாவதியாகும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவின் பாராளுமன்ற அங்கததுவம் எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதியுடன் காலாவதியா கும் எனத் தெரிவக்கப்பட்டுள்ளது.

யாப்பின் 66 ஆவது சரத்திற்கு அமைய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் பாரா ளுமன்ற கூட்டங்களில் பங்குபற்றாத சந்தர்ப்பத்தில் அவரது பாராளுமன்ற அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி.திஸநாயக்க நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் சிறைவைக்கப்பட்டதையடுத்து தொடர்ச்சியாக சபைக்கூட்டத்தில் பங்குபற்றாததன் காரணமாக எதிர் வரும் 7 ஆம் திகதி அவரது அங்கத் துவம் இரத்துச் செய்யப்படும்.(ற-9)

## சிறைச்சாலை முறை மறுசீரமைக்கப்படும்

### நீதித்துறை அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சிறைச்சாலை முறை மறு சீரமைக்கப்படும் என்று நீதித்துறை சீர் திருத்த அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்சமயம் சுமார் 2000 பேர் சிறைவாசம் அனுபவித்து வருகிறார் கள். அமைச்சின் முக்கிய நோக்கம் இவர்களுக்கு புனர்வாழ்வு அளித்துப் பின்னர் சமுதாயத்துடன் சேர்ந்து வாழ வதற்குச் சந்தர்ப்பத்தை அளிப்பதாகும்.

அவர்கள் மீண்டும் குற்றச் செயல் களில் ஈடுபடாமல் இருப்பதை உறு திப்படுத்துவதும் திட்டத்தின் மற்று மொருநோக்கமாகும்.

ஒருவர் சிறைத்தண்டனை அனுப விக்கும் போது வழங்கப்படும் புனர் வாழ்வுத் திட்டங்கள் மூலம் இந்த நோக்கங்கள் அடையப்படும். புனர் வாழ்வு நிலையங்கள்நாடு பூராகவும் விஸ் தரிக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

சர்வதேச தரங்களின் படி ஒரு சிறைக் கைதிக்கு 540 சதுர அடி யுள்ள இடம் வழங்கப்படவேண்டும் ஆனால், இலங்கையில் 100 பேர் தங் கக் கூடிய இடத்தில் 400 கைதிகளுக்கு இடம வழங்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ற-2)

## தரம்-1 இல் மாணவர் அனுமதி; கல்வி அமைச்சு சுற்றறிக்கை

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் வரை மாகாணசபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 1இற்கு மாணவர்களை அனுமதிக்க வேண்டாம் என கல்வி அமைச்சு சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

மாகாண சபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண் ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லையானது அடுத்தமாதம் நடுப்பகுதி வரை நீடிக்கப்பட்டுள்ள தாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப்பாடசாலைகளில் மாண வர்களை அனுமதிப்பதற்காக 75 ஆயி ரம் விண்ணப்பப்படிவங்கள் கிடைக் கப் பெற்றுள்ளன. இவ் விண்ணப்பங் களைக் கணனிகளில் தரவுபடுத்தும் நடவடிக்கைகள் இம் மாத இறுதிக்குள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

மாகாண சபைகளுக்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்கான புதிய நடை முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வுள்ளது. இது தொடர்பான யோசனை கள் தற்போது ஆராயப்பட்டு வருகின் றன. இது குறித்த முடிவு அடுத்த வார முற்பகுதியில் வெளியிடப்படும் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக மாகா ணக் கல்விப் பணிப்பாளர்களுட னான கலந்துரையாடல் கடந்த 20 ஆம் திகதி கல்வியமைச்சில் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-2)

# மசூதியில் தற்கொலை குண்டுத் தாக்குதல் 30 பேர் பலி; சுமார் 75 பேர் படுகாயம்

## இஸ்லாமாபாத்தில் பெரும் பதற்றம்

(இஸ்லாமாபாத்)

**இஸ்லாமாபாத்தில் உள்ள மசூதி ஒன்றில் தற்கொலை படை தீவிரவாதிகள் புகுந்து தாக்கியதில் 30பேர் பலியானார்கள். மற்றும் 75க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.**



இந்த சம்பவம் பற்றி பாகிஸ்தான் அரசுத் தரப்பில் கூறப்படுவதாவது,

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தின புறநகர் பகுதியில் பாரி இமாம் மசூதி உள்ளது. இநத மசூதியில் ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழா நேற்று முன்தினம் நடந்தது. வெள்ளிககிழமை என்பதால் சிறப்புத் தொழுகையும் நடந்தது. திருவிழாவை முன்னிட்டு சிறப்பு தொழுகையில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு தொழுகை நடத்தினர்,

தொழுகை நடந்துகொண்டிருந்த போது 11 மணியளவில் திடீரென தற்கொலைக் குண்டுதாரி மசூதிக்குள் ஊடுருவி குண்டை வெடிக்கச செய்தான். இந்தக் குண்டு வெடித்து சிதறியதில் பலர் உடல் சிதறிப் பலியாயினர். இறந்தவர்கள் 19பேர் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் இறந்தவர்கள் 30 பேர் என உள்ளூர் ரி.வி செய்திகள் தெரிவிக்கின்றன. வெடிவிபத்தில் 75க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

மசூதிக்குள் கூட்டம் நிறைந்த பகுதிக்குள் மனித வெடிகுண்டு தீவிரவாதி ஊடுருவிச் சென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இந்த மசூதிக்கு ஷியா மற்றும் சன்னி முஸ்லிம்கள் இருவரும் கூட்டமாக வருவது வழக்கம்.

சம்பவத்தை நேரில் பார்த்த தாரிக் அலி என்பவர் கூறும் போது,

ஒருவன் கையில் வெடிகுண்டைச் சுழறறி வந்து அதைக் கூட்டத்தை நோக்கி தூக்கி வீசியதாகக் கூறினார். அந்தக் குணடு அடுத்தடுத்து வெடித்ததாகவும, அப்போது பக்தர்கள பலர் தூக்கி வீசப்பட்டதாகவும் கூறினார்.

குண்டு வீசியதில் தீவிரவாதியும் குண்டுவெடிப்பில இறந்தார் என்றும் ஒரு ஆணின் துண்டிக்கப்பட்ட தலை மசூதியின் காம்பவுண்ட் சுவற்றில் இருப்பதாகவும் அலி தெரிவித்தார். எனினும முதலில் வந்த தகவல்கள் ரிமோட் மூலம் குண்டு வெடிக்கச் செய்ததாகவும் தெரிவித்தன.

குண்டுவெடிப்புக்கு தற்கொலைப் படைத் தீவிரவாதிகளே காரணம் என பெரும்பாலானோர் தெரிவிக்கின்றனர். குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் இஸ்லாமாபாத் மற்றும் ராவல்பிண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மருத்துவமனைகளில் பாகிஸ்தான அரசு அவசரநிலை பிரகடனம் செய்துள்ளது. குணடு வெடிப்புக்குப் பிறகு ஆவேசமடைந்த மக்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். பாதுகாப்பை சிவரக் கவனிக்காத பொலிஸாரை தாக்க முறபட்டனா. இதனால் பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். கண்ணீர் புகைகுண்டும் வீசினர்.

ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவிற்கு பாரி இமாம் மசூதிக்கு பாகிஸ்தான் முழுவதும் இருந்து பக்தர்கள் வருவது வழக்கம் இந்த குண்டு வெடிப்பிற்கு இன்னமும் சரியான காரணம் தெரியவில்லை. குண்டுவெடிப்புக்கு எதிர்ப்புத் தெரிவத்து இஸ்லாமிக் கூட்டணி முட்டாஹிதா மஜலிஸ் - இ -அமல் கூட்டணி ஆகியவை நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

பெரும்பான்மையான சன்னி முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையான ஷியா முஸ்லிம்களுக்கும பிரிவை ஏற்படுத்த இந்த குண்டு வெடிப்பு நடந்திருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த சில வருடஙகளாக மசூதியில் வெள்ளிககிழமை தொழுகையின் போது குண்டுவெடிப்பு சகஜமாகிவிட்டது. இதனால் பலர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள லெஷனில் 234 அடி உயர புத்தர்சிலை உள்ளது. ஆப்கானிஸ்தானில் பாமியான் பகுதியில் இருந்த நின்ற நிலை புத்தர் தலிபான்களால் அழிக்கப்பட்டுவிட்டது. இதையடுத்து உட்கார்ந்த நிலையில் உள்ள இந்த மிகப் பெரிய புத்தர் சிலையைக் காண ஏராளமான வெளிநாட்டுப் பயணிகள் வந்தவண்ணம் உள்ளனர்.

# நேபாளத்தில் மோதல்; 25 மாவோயிஷ்டுகள் பலி

## 70 பேர் வரை காயம்

(காத்மண்டு)

நேபாளத்தில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த மோதலில் 25 மாவோயிஷ்டுகள் உயிரிழந்துள்ளதுடன் 70 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

தென்கிழக்கு நேபாளத்தில் இந்த வாரத்தில் நடந்த மோதல்களில் உயிரிழந்த 25 மாவோயிஷ்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை நேபாள இராணுவம் தெரிவித்துளளது.

உயிரிழந்த மாவோயிஷ்ட் தீவிரவாதிகளின் உடல் உதய்பூர் மாவட்டம் தம்ளிசா பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. இது காத்மண்டுவில் இருந்து 350 கி.மீ. தொலைவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# இரட்டைச் சகோதரிகளுக்கு ஒரே நாளில் பிரசவம்



(ஷோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த இரட்டைச் சகோதரிகள் ரேச்சல், ரெபெக்கா அகியோருக்கு ஒரே நாளில் குழந்தை பிறந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த இரட்டை சகோதரிகள் ரேச்சல், ரெபெக்கா. இவர்கள் இருவரும் நிறைமாத கர்ப்பிணியாக இருந்தனர். இந்நிலையில் ரேச்சலுக்கு நேற்று முன்தினம் ரொச்செஸ்டர் நகரில் உள்ள மருத்துவமனையில் அழகான ஆண்குழந்தை பிறந்தது. சிறிதுநேரத்திற்குள் ரெபெகாவும் அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அழகான பெண் குழந்தை பெற்றெடுத்தார். இரட்டை சகோதரிகள் ஒரேநாளில் குழந்தை பெற்ற அதிசயம் அந்த மருத்துவமனையில் பெரும் பரபரப்பாக பேசப்படடது. படத்தில இரட்டை சகோதரிகள் தங்கள் குழந்தைகளுடன காட்சி அளிப்பதைக் காணலாம். (ற)

# காங்கிரஸ் தலைவராக சோனியா போட்டியின்றி மீண்டும் தேர்வு

(புதுடில்லி)

அகில இந்திய காங்கிரஸ தலைவர் தேர்தலில் சோனியாவை எதிர்தது வேறு யாரும் வேட்புமனு தாக்கல்செயயாததால் அவர் மீணடும் போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்பட்டார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தல ஜூன் 9ஆம் திகதி நடக்கும் என்றும் இதற்கான வேட்பமனு தாக்கல் மே 25ஆம் திகதி தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி கடந்த 25ஆம் திகதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. முதல் நாளன்று சோனியாவுக்காக பிரதமர் மன்மோகன்சிங் முதல் வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவரை தொடர்நது மத்திய அமைச்சர்கள், மாநில காங்கிரஸ் முதல்வர்கள், மாநில காங்கிரஸ் தலைவர்கள் சோனியா சார்பில் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். அன்று மட்டும் சோனியாவுக்காக 92 வேட்பு மனுக்கள் குவிந்தன.

வேட்புமனு தாக்கல் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியுடன் முடிவடைந்தது. சோனியா சார்பில் 100க்கும் மேற்பட்ட வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. வேறு யார் சார்பிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

அதனால் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தி மீண்டும போட்டியின்றி தேர்ந்து எடுக்கப்படுகிறார் என்று தேர்தல் அதிகாரியான ஆஸ்கார் பெர்னாண்டஸ் கூறினார்.

ஆனாலும் வேட்பு மனு பரிசீலனை முடிந்த பிறகு அது அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சோனியா காந்தி 1988ஆம் ஆண்டு சீதாராம் கேசரிக்கு பதில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக போட்டியின்றி முதன் முறையாக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

காங்கிரசின் செல்வாக்கை உயர்த்தி மத்தியில் மீண்டும் ஆட்சியை பிடிக்கும் நிலையை சோனியா உருவாகினார். பிரதமர் பதவி தன்னை தேடி வந்தபோது அதை நிராகரித்து மன்மோகன் சிங்குக்கு கொடுத்தார்.

தற்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவராகவும் தேசிய ஆலோசனை கமிஷன் தலைவராகவும் இவர் இருக்கிறார். (ற)

# அல் -லிபியிடம் தீவிர விசாரணை; முக்கிய தகவல்கள் சிக்கின

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சமீபத்தில் கைதுசெய்யப்பட்ட அல் - கெய்டா அமைப்பின் மூத்த தலைவர் அபு பரஜ் அல்லிபியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த அமைப்பு குறித்த முக்கிய தகவல்கள் தெரியவந்துள்ளதாகப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி வடமேற்கு பாகிஸ்தானில் நடந்த துப்பாக்கிச் சண்டையின் போது கைதுசெய்யப்பட்டார் அல்-லிபி. இவர் அல்-கெய்டா அமைப்பின் 3ஆவது உயர் தலைவர். அச் ம்பவத்துக்குப் பிறகு அல்-கெய்டா அமைப்பைச் சேர்ந்த 10க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் கிடைத்த தகவலை அடுத்து, அந்த அமைப்பைச் சேர்ந்த பலர் விரைவில் கைது செய்யப்படுவர் எனவும் விசாரணை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தானில் ஒளிந்துள்ள அல்-கெய்டா பயங்கரவாதிகளைப் படைவீரர்கள் சுற்றி வளைத்து வருகின்றனர். விரைவில் மேலும் பலர் கைது செயயபபடலாம் என்று விசாரணை அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், அல்-கெய்டா தலைவர் ஒசாமா பின்லேடன் தங்கியிருக்கும இடம்குறித்த தகவலை அல்-லிபி தெரிவித்தாரா? இல்லையா? என்பது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் எதுவும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது. (ற)

# ‘வயகரா’ - கண் பார்வை பறிபோகும்

## -நிபுணர்கள் எச்சரிக்கை

ஆண்மை குறைவைப போக்கி ‘செக்ஸ்’ உணர்வை அதிகரிக்கும் ‘வயகரா’ மாத்திரை இப்போது உலகம் முழுவதும் பிரபலம் ஆகி அமோகமாக விற்கிறது.

‘பைசர்’ நிறுவனத்தின் இந்த மாத்திரையை இருதய கோளாறு உள்ளவர்கள் பயன்படுத்தக்கூடாது. டாக்டர்களின் அனுமதி இன்றி விற்கக் கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதும் இந்த மாத்திரைகளை கள்ளச்சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்குபவர்கள் ஏராளம். இந்த வயக்கராவுக்கு போட்டியாக ‘சியாலிஸ்’ என்ற மாத்திரை மார்க்கெட்டுககு வந்துள்ளது.

இது குறித்து அமெரிக்காவில் உணவு, மருந்துதுறை நிபுணர்கள் ஆய்வு நடத்தி வந்தனர். இருதய கோளாறு மற்றும் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கண்பார்வை இழக்கும் அபாயம் அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் நடத்திய ஆய்வில் 38பேர் வயகரா மாத்திரையை அடிக்கடி பயன்படுத்தியதால் கண்பார்வை பாதிக்கபபட்டு இருப் பது தெரியவந்துள்ளதது. 4 பேர் ‘சியாலிஸ்’ மாத்திரையைப் பயன்படுத்தியதால் கண்பார்வை இழந்துள்ளனர். இந்த கண்பார்வை இழப்புக்கு நான் ஆர்ட்டரிக் ஆனடீரியர் இஸ்செமிக ஆப்டிக் நிரோபதி என்று பெயர். கண் நரம்புகள் இதில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகும்.

வயகரா மாத்திரை போத்தல்களில் ‘இதை பயன்படுத்துவோருக்கு கண்பார்வை பாதிக்க வாய்ப்புஉண்டு’ என்று எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட வேணடும என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கடல் பகுதியை நிலமாக்கும் நடவடிக்கை பேரழிவை ஏற்படுத்தும் -நிபுணர்கள் எச்சரிக்கை

(பீஜிங்)

சீனாவில் கடல் பகுதிகளை நிலமாக்கி வரும் நடவடிக்கைகளால், கடலோரப் பகுதிகளில் மிகப் பெரிய நாசம் ஏற்படும் என வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

கடல் பகுதிகளை நிலமாக்கி வருவதால், கடல்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் வாழ்க்கைமுறை பாதிக்கப்படுகிறது. மேலும் நதி முகத்துவாரம் அடைபட்டுவிடுகிறது. இதனால் கடலோரப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளில் மீன் இனங்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கையே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. யாங்ட்சே, பேர்ல்,மஞ்சள் ஆற்றுப் பகுதிகளிலும் இந்த நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இம்மாதிரியான சீரழிவைத் தடுத்து, சுற்றுச்சூழலைப் பேண, செயற்கைக்கோள்கள் மூலம் கடல்பகுதி கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத் தபபடும். 2009ஆம் ஆண்டில் இது நிறைவடையும.

ஜியோஜோ விரிகுடா பகுதி மட்டும் 35 சதவீதம் சுருங்கியுள்ளது. 1928இல் 535 சதுர கிலோமீற்றர்கள் இருந்த இப்பகுதி, தற்போது 367 சதுர கிலோ மீற்றராக சுருங்கிவிட்டது.

2002இல் மட்டும் கடல்பகுதிகளை நிலமாக்கும 20 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது குயிங்டோ நிர்வாகம். இதன்மூலம் 16 சதுர கி.மீ. அளவுக்கு கடல் பகுதி மறைந்து, நிலமாக மாறியுள்ளது என நிபுணர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ற)

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - குறள்

வலம்புரி

## போர்ச் சங்கு ஒலிக்கிறது

சமாதான சூழ்நிலைக்கு ஆபத்து என்ற எச்சரிக்கையின் மறுவடிவம் போர் என்பதாகவே இருக்கும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஆபத்து என்ற எச்சரிக்கையை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்டுள்ளது.

யுத்தநிறுத்தத்தை பாதுகாப்பிற்காக - நியமிக்கப்பட்ட குழுவே போர்நிறுத்தத்திற்கு ஆபத்து எனக் கூறும் அளவில் அங்கு இருக்கக்கூடிய நிலைமை என்ன என்பதை யாவரும் ஊகிக்க முடிகின்றது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மேற்கொண்ட சமாதானத் தூது எந்தவிதமான வெற்றியையும் தரவில்லை என்றால் மீண்டும் போர் வெடிப்பதற்கான சாத்தியப்பாடுகளே உண்டு என்பதை ஊகிக்கமுடியும்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து மக்கள் சமாதானத்தை எதிர்பார்ப்பது முடியாத காரியமே.

அத்துடன் ஆட்சி பீடத்தை காப்பாற்றவேண்டும் என்பதற்காக சமாதான விரோத சக்தியான ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தபோதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சமாதானத்துக்கு எதிரானவர் என்பது உறுதியாகிவிட்டது.

இருந்தும் ஜனாதிபதியின் உரையை மக்கள் நம்பினர். "யுத்தம் தந்த கொடுமை இன்று நானிருக்கும் நிலை. என்னைப் போல் எத்தனையோ பெண்கள் தங்கள் கணவன்மாரை இழந்து கண்ணீர் வடிக்கின்றனர். இச்சோக நீட்சிக்கு முடிவுகட்ட வேண்டுமானால் யுத்தத்திற்கு முடிவுகட்டுவதே ஒரே வழி. சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக என்ன விலை கொடுப்பதற்கும் நான் தயாராக இருக்கின்றேன்." இவ்வாறெல்லாம் கூறிய ஜனாதிபதியை மக்கள் நம்பினர்.

ஆனால், அவர் தன்னை நம்பிய மக்களை ஏமாற்றி விட்டார். ஜே.வி.பியோடு கூட்டுச் சேர்ந்ததே யுத்தத்தை நடத்துவதற்காக என்பதை இப்போது உணரமுடிகிறது.

அதாவது, விடுதலைப் புலிகளுடன் மீண்டும் ஒரு யுத்தம் நடத்துவதே ஜனாதிபதியின் நோக்கம். எனினும் யுத்தத்தை தான் ஆரம்பித்ததாக இருக்கக் கூடாது என்பதிலும் அவர் விழிப்பாக இருந்தார். இதற்காக ஜே.வி.பியை தன்னுடன் சேர்ந்துக் கொண்டார்.

நாட்டில் சமாதானத்தை விரும்பாதவர்களில் ஜே.வி.பி. முதன்மையானவர்கள் என்ற விடயம் ஜனாதிபதிக்கு நன்கு தெரிந்திருந்தது. எனவே ஜே.வி.பியை ஆட்சி பீடத்தில் சேர்ந்துவிட்டால் அவர்கள் எப்பாடுபட்டும் சமாதானத்தை குழப்பிவிடுவார்கள்.

அந்த குழப்பத்தோடு யுத்தத்தை நடத்தி முடித்துவிடலாம். அவ்வாறு யுத்தம் நடத்தும்போது யுத்தம் ஏற்பட்டதற்கான காரணத்தை ஜே.வி.பியினதும், விடுதலைப் புலிகளினதும் தலையில் சுமத்தி விடலாம் என்பது ஜனாதிபதியின் நம்பிக்கை.

இப்போது யுத்தத்தை நடத்துவதாகவும் இருக்கும் - அந்த யுத்தத்திற்கு காரணம் தான் அல்ல என்பதையும் மக்களிடையே ஏற்படுத்தி விடலாம் என்ற நோக்கிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காய் நகர்த்தல் அமைந்துள்ளது.

அவரின் காய் நகர்த்தல் சாத்தியப்பாடுபோல் தெரிகிறது. திருகோணமலை நகர மையத்தில் புத்தர் சிலை வைக்கப்படுவது சமாதானத்தை விரும்புபவர்களால் செய்யப்படுவன அல்ல.

அதேநேரம் சமாதானத்தை விரும்புபவர்களுக்கு புத்தர் சிலையை அகற்றுவதிலும் சிக்கல் இருக்க முடியாது.

ஆக, மீண்டும் ஓர் யுத்தத்தை நடத்தி அதிலும் விடுதலைப் புலிகள் வெற்றியடைந்தால் சமாதானம் பற்றி சிந்திக்கலாம் என்ற நோக்கிலேயே ஜனாதிபதியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

சமாதானம் என்று கூறி காலம் கடத்தும் அரசின் கபடத்தனத்தை தொடர்ந்தும் சகித்துக் கொள்வதற்கு விடுதலைப் புலிகளும் தயார் இல்லை.

ஆகவே ஒட்டுமொத்தத்தில் போர்ச் சங்கொலி ஒலிப்பது தவிர்க்கமுடியாததாய் உள்ளது.

# கொட்டப்படும் குப்பைகளால் சுகாதாரச் சீர்கேடு; தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குக!

## யாழ். புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள 200 குடும்பங்கள் ம.உ.ஆ. குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புகையிர நிலையத்திற்கு முன்பாகத் தொடர்ந்தும் குப்பை கூழ்ங்கள் கொட்டப்பட்டு வருவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு முகம்கொடுக்கும் நிலைக்கு உள்ளாகியிருப்பதாக அப்பகுதி மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

யாழ்.புகையிரத நிலையத்திற்கு முன்பாகப் பொதுமக்களும் மற்றும் அரச நிறுவனங்களும் தமது குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டி வருவதாகவும் அவ்விடத்தில் பல முறை குப்பைகளை போடவேண்டாம் எனத் தெரிவித்த போதும் அதை கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் அவ்விடததில் குப்பைகளை கொட்டி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அவ்விடத்திற்கு அருகாமையில் உள்ள 200 குடும்பங்கள் சுகாதார சீர்கேட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதனால் அவ்விடங்களில் குப்பைகள் கொட்டுவது நிறுததப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவ் இடத்தைச் சேர்ந்த பொது மக்கள் கையெழுத்திட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ருபான் சந்திரசேகரவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

மேலும் இம் மகஜரின பிரதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டுள்ளன. (ற-19)

# வீதியால் சென்ற இளைஞனை இளைஞர் குழு தாக்கியது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இலந்தைக்குள வீதியால் துவிச்சககர வண்டியில் சென்ற அப்பாவி இளைஞனை அங்கு கூடி நின்ற இளைஞர் குழு ஒன்று வழிமறித்து கையாலும், மோட்டார் சைக்கிள் தலைக் கவசத்தாலும் கடுமையாகத் தாக்கியதில காயமடைந்த நிலையில் அவ் இளைஞன் யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பிரஸ்தாப இளைஞனின் துவிச்சக்கர வண்டியையும் அங்கு நின்ற இளைஞர் குழு வாளால் அடித்து சேதப்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத்துறை இலந்தைக் குளம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இவ் இளைஞர் குழு மது அருந்திவிட்டு கடுமையாகத் தாக்கியதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த பி. பிறின்ஸ் என்ற இளைஞனே காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இளைஞன் இதுகுறித்துத் தெரிவிக்கையில், தான் வீதியால் சென்றுகொண்டிருந்த வேளையில் முதலில் மூன்று இளைஞர்கள் தன்னை மறித்து விட்டு ஒன்றும கேட்காமல் திடீரென கையால் அடித்ததாகவும் பின்னர் எங்கிருந்தோ வந்த பல இளைஞர்கள் ஒன்று கூடி கையாலும் தலைக் கவசத்தாலும் தாக்கியதோடு அவர்கள் வைத்திருந்த வாளால் தனது துவிச்சக்கர வண்டியையும் அடித்துச் சேதப்படுததியதாகக் கூறினார்.

இது தொடர்பாக யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ற-19)

# சூரியவெளி, மீனாட்சிபுரம், வில்லூன்றி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வீடுகள் இன்று பயனாளிகளிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் நிதியுதவியுடன் யாழ் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புததிட்டத்தின் கீழ் சூரியவெளி மீனாட்சிபுரம், வில்லூன்றி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட 130 வீடுகள் இன்று ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்திரு கருணாரடணம் அடிகளார், மௌலவி பி.ஏ.எஸ் சுபியான் ஆகியோரும் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசியல துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் திலகர், யாழ்.மாநகரசபை ஆணையாளர் குணராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், ரவிராஜ், கஜேந்திரகுமார் ஆகியோரும் நிகொட் நிறுவனத்தின் பிரதித்திட்டப்பணிப்பாளர் க. நவரட்ணராஜா யாழ்ப்பாண பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன், யாழ். சேவாலங்கா மன்றத்தின பணிப்பாளர் ஆனந்தராஜா, கியூடெக் நிறுவனத்தின் இயக்குநா ஜெயக்குமார் அடிகளார், யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் பொ. விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயததின் சிரேஷட கள உத்தியோகத்தர் பி. பாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-19)

# வடக்கு- கிழக்கு மாகாண முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான கருத்தமர்வு

(மன்னார்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சியையும், முன்பளளிகளின் கல்வி அபிவிருத்தியையும் ஊக்கமளிக்கும் நோக்கில் தொடர்ச்சியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

அந்தவகையில் வடக்குக் கிழக்கிலுள்ள முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான கருத்தமர்வொன்று கடந்த 25 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் மன்னார் குடும்ப உளவளத் துணை நிலையத்தில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் செல்வி. கௌரீஸ்வரி தலைமையில் இடம்பெற்றுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கேற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகக்கொடி, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக்கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டன. வரவேற்புரை, ஆசியுரை என்பவற்றினையடுத்து இக்கருத்தமர்வின முக்கியத்துவம் தொடர்பாக வருகை தந்திருந்த பிரமுகர்கள் விரிவாக எடுத்துவிளக்கினர்.

ஆசியுரையை வழங்கிய உளவளத்துணை இயக்குநர் பங்குத்தந்தை அருட்திரு விக்ரர்சோசை தனது உரையில்,

"எமது சிறார்கள் மிகுந்த முக்கியத்துவமுடையவர்கள். அவர்களே நாளைய எமது தலைவர்கள்" எனக் குறிப்பிட்டாா. அவரையடுதது கருத்துரை வழங்கிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மன்னார் மாவட்டப் பணிப்பாளர் கேசவன் "வழிநடத்தும முன்பள்ளி ஆசிரியர்கள் சகல துறைகளிலும் திறமையுள்ளவர்களாக இருக்கவேண்டும் எனக்கூறினார். மன்னார் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றுகையில், முன்பள்ளிக் கல்வி மேம்பாடு பற்றியும், கல்வி வலயத்தோடு இணைந்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் செயற்பாடுகள் குறித்தும் குறிப்பிட்டார்.

(ற)

# மல்லாவி அரச மருத்துவமனைக்கு புதிய மருத்துவ அதிகாரி நியமனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கிவரும் மல்லாவி மருத்துவமனைக்கு மருத்துவ அதிகாரியாக வைத்திய கலாநிதி திருமதி கமலா ஜெகூ சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். பல வருட காலமாக இவ் வைத்தியசாலைக்கு வைத்திய கலாநிதி ஒருவர் இல்லாதிருந்த குறை இதன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் நாலு பேர் டாக்டர் பட்டம் பெற்று சொந்த மாவட்டத்தில பணியாற்ற வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லாமல் வெளி மாவட்டத்துக்குச் சேவை செய்யச் செல்லும் இக்கால கட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வைத்தியக கலாநிதி இப் பிரதேசத்துக்கு சேவை செய்ய முன்வந்ததையிட்டு இப் பிரதேச மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (து-128)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இறைவனை நாம் போற்றிப் பாடுவோம். இதயம் நிறைந்த பக்தியுடன் அவருடைய திருநாமத்துடன் ஒன்றியிருப்போம். எப்போதும் ஜெபம் செய்தபடியே இருப்போம். பிறகு நமது துயரமனைத்தும் தீரும் முக்தியை நோக்கி மிகழ்ச்சியுடன் நடைபோடுவோம்.

சுவாமி விவேகானந்தர்





நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற புதுவை இரத்தினதுரையின் "பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" நூல்வெளியீட்டு விழாவிலிருந்து.......... படங்கள்:ஐங்கரன்

## 'பூவரசம்வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' நேற்று யாழ். பல்கலையில் வெளியீடு

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பூவரசம்வேலியும் புலுனிக் குஞ்சுகளும் கவிதைத் தொகுப்பு நேற்றுமாலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிடப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தேசியக்கொடியை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சயன் ஏற்றிவைத்தார். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், திருமதி நாச்சியார் செல்வநாயகமும் விழாச்சுடர் ஏற்றினர்.

இதனைத் தொடர்ந்து வணபிதா. நீ.மரியசேவியர் அடிகள், பேராசிரியர் கலாநிதி ம.வேதநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகள் நடைபெற்றன. பின்னர் ஊடகவளம் மற்றும் பயிற்சி நிலையத்தின் இயக்குநர் கலாநிதி அ.சண்முகதாஸ் சிறப்புரையாற்றினார்.

பின்னர் நூலின் வெளியீட்டுரையை சூழலியலாளரும், ஊடகவியலாளருமான பொ.ஐங்கரநேசன் நிகழ்த்தினார். நூலினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் வெளியிட்டுவைக்க இந்நூலின் முதற்பிரதியை புதிய விஞ்ஞானக் கல்விநிலைய இயக்குநர் இரா.அருட்செல்வம் பெற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. பின்னர் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கனும், எழுத்தாளர் ஐ.சாந்தனும் மதிப்பீட்டுரையை ஆற்றினார்கள். இறுதியில் நூலாசிரியர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் ஏற்புரை இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், ஈழவேந்தன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கமலநாதன் மற்றும் மதகுருமார்கள், பெரியார்களும் கலந்துகொண்டனர். (ச-19)

## திடீர் புத்தர்சிலை விவகாரம் ஜூன் ஒன்றில் பேச்சுவார்த்தை

(திருகோணமலை)

திருமலையில் சட்டவிரோத வணக்க ஸ்தலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையினருக்கும், சிங்களப் பிரதிநிதிகளுக்கும் இடையே இச்சந்திப்பு நிகழவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை நகரில் ஏற்பட்டிருக்கும் நிலைமை தொடர்பாக அமைச்சர்களுக்கும், தமிழ்மக்கள் பேரவையினருக்கும் இடையே கடந்த 25 ஆம் திகதி திருமலை ஆளுநர் செயலகத்தில் சந்திப்பொன்று நடைபெற்றது.

நகரிலிருக்கும் சட்டவிரோத வணக்க ஸ்தலங்களை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் அப்புறப்படுத்துவதற்கு நகரசபைக்கு சட்ட ஆலோசனை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தைக் கேட்பதென்று அச் சந்திப்பின்போது தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. (ச)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன்...

மற்றும் எதிர்வரும் இரண்டாம் திகதி புத்தர்சிலை அகற்றப்படாவிட்டால் மாவட்ட ரீதியாகவும், வடக்கு கிழக்கு இணைந்த ரீதியாகவும்' எவ்வாறு போராட்டங்களை ஜனநாயக ரீதியில் மேற்கொள்வது என்பது குறித்து தாம் தமிழ்ச்செல்வனுக்கு விளக்கியதாக அவர் தெரிவித்தார்.

போராட்டங்களை மேற்கொள்வது தொடர்பான இறுதிமுடிவுகள் மாவட்ட ரீதியாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பினையடுத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருமித்த கூட்டத்தில் இறுதிமுடிவின் அடிப்படையில் ஜனநாயக ரீதியில் எந்த வகையில் போராட்டங்களை மேற்கொள்வது என்பது குறித்தும் பேசப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-4,8)


திருமணக்கார் [குளிரூட்டியது] வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள்
☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.



தொடர்பு: ரட்ணம்

சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467


## ஜனாதிபதி சந்திரிகா மிகவிரைவில் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவார்

### பில் கிளின்டன் நம்பிக்கை



ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும், பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் பொதுக்கட்டமைப்பே சிறந்த பாலமென அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும், ஐக்கிய நாடுகள் சபையின் ஆழிப்பேரலை தொடர்பான விசேட பிரதிநிதியுமான பில் கிளின்டன் தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் அவர் நடத்திய ஊடக மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பினை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் நடைமுறைப்படுத்துவாரென தான் நம்புவதாக கிளின்டன் தெரிவித்தார்.

ஜனாதிபதியினை தான் சந்தித்தவேளையில், பொதுக்கட்டமைப்பினை அமைப்பதற்கான திகதி எதனையும் தெரிவிக்கவில்லை எனவும், ஜனாதிபதி தனது கட்சியினருடன் அது தொடரபில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் கூறியதாக கிளின்டன் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா நிச்சயமாக பொதுக்கட்டமைப்பினை அமைக்கும் உறுதியிலேயே இருக்கின்றார் என்பதனை தன்னால் கூறமுடியுமெனத் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையின் பின்னர் தற்சமயம் இலங்கைக்கு உரிய நிதியுதவிகள் கிடைத்தவண்ணம் உள்ளன. எனினும் எதிர்காலத்தில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையானது ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்பு நடவடிக்கைகளின் போது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிபோலவே தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களிலும் புனரமைப்புக்கள் இடம்பெறவேண்டுமென எதிர்பார்க்கின்றது.

இதன்போது ஏற்படும் தடைகளைக் களைவதற்காக புனரமைப்புக்களில் பாரபட்சம் ஏற்படாதவகையில் ஐக்கியநாடுகள் சபை இரண்டுதரப்பினருக்கும் நிபந்தனைகளை விதிக்கமுடியுமென தெரிவித்தார்.

முஸ்லிம் தலைவர்களை தாம் நேற்றுச் சந்தித்தபோது, அவர்கள் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் நன்மையற்றவர்களாக இருப்பதாகத் தெரிவித்த பில்கிளின்டன், தாம் பொதுக்கட்டமைப்புக்குள் உள்ளீர்க்கப்படமாட்டார்கள் என்ற சந்தேகம் முஸ்லிம் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரிவித்தார். (ச-4)

## அமைதிப் பேச்சுக்களை...

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பெர்னார்ட் ஏ.பி.குணதிலக ஜனாதிபதி புஷ்ஷை வெள்ளை மாளிகையில் சந்தித்து உரையாடியபோதே புஷ் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக அரசியல் நோக்கங்களுக்காக ஆயுதம் ஏந்துவதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசும், விடுதலைப் புலிகளும் அமைதிப் பேச்சுகள் மூலமே தீர்வு காணமுடியும்.

இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையை மதிக்கக் கூடியவகையிலான அமைதிப் பேச்சுக்களை இருதரப்பும் ஆரம்பிக்குமாயின் அதனை அமெரிக்கா ஆதரிக்குமென ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு அரசினாலும், விடுதலைப் புலிகளினாலும் ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமைதிப் பேச்சுக்களுக்கு வழிவகுத்தது. எனினும் எதிர்பாராத விதமாக இந்த அமைதி முயற்சிகள் தற்பொழுது முடங்கியுள்ளன.

இடைநிறுத்தப்பட்ட அமைதி பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென புஷ் கேட்டுள்ளார்.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் போன்ற சவால்கள் இருந்தபோதும் அங்குள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. எனவே அமைதிப் பேச்சுகள் வெற்றிபெற்றால் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி நிலை என்பன முன்னேற்றமடையும்.

கல்வி கற்றோர் அதிகமாகக் காணப்படுவதால் புதிய தொழில்நுட்பமுறையில் பல்வேறு வகையிலான தொழிற்சாலைகளை உருவாக்கமுடியுமென புஷ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சுனாமிப் பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ சர்வதேச சமூகத்துடன் அமெரிக்கா இணைந்து நிற்கிறது. அமெரிக்கா சார்பில் ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் மீள்கட்டமைப்பை மேற்கொண்டு வருகின்றனர் என்றார்.

அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்களுக்கு இலங்கையின் சார்பில் நன்றி தெரிவித்த புதிய தூதுவர் குணதிலக, அமெரிக்காவின் நட்புநாடாக இலங்கையை அங்கீகரித்ததற்கு மகிழ்ச்சியினையும் வெளியிட்டுள்ளார். (ச)

## மட்டக்களப்பில்...

சூட்டுக்கு இலக்கான அவரின் சடலத்தில் ஏழு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட பொலிஸ் அதிகாரியின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மட்டககளப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-08)

## ஐ.நா. விசேட...

கார்மேல் பாத்திமாகல்லூரி மைதானத்தில் உலங்குவானூர்தி மூலம் சென்ற இவர் கல்லூரி மண்டபத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆழிப்பேரலை நிவாரண நடவடிக்கையுடன் தொடர்புடைய சிவில் அதிகாரிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் பங்கேற்று நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் குறித்து கேட்டறிந்துகொண்டார். (ச-04)

## கண்காணிப்புக்...

அதனை நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவில்லை. எனவே எதிர்வரும் 2 ஆம் திகதி புத்தர் சிலை அகற்றப்படாவிட்டால் பொதுமக்கள் மத்தியில் இருந்து பாரிய நெருக்கடிநிலை உருவாக வாய்ப்பிருப்பதாகவும் எழிலன் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-4)


மனோகரா யாழ்
இன்றுமுதல்
ஜீவா, கஜாலா, சரண்யா நடித்த
ராம்



கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், நேசாஜெயராம், லமிக்சா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிரஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா நடித்த
உளவுத்துறை



கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

EXPO AIR
your friend in the skies...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.